## அண்ணாவுக்குப்பதிலாக நெடுஞ்செழியன்


Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10

தபால்பெட்டி எண்: 49

இதழ் 349

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 14 ஜுலை 8 திங்கட்கிழமை [27-1-69]


## குடியரசு விழாவில் கலந்துகொண்டார்

சென்னை, ஜன. 26

இந்தியக்குடியரசின் பத்தொன்பதாண்டுவிழா இன்று தமிழ் நாட்டின் தலைநகரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை மரினு கடற்கரையில் காந்தி சிலைக்கருகே முப்படைப் பிரிவுகளின் அணிவகுப்பு மரியாதையை தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் ஏற்றுக் கொண்டார்.

கவர்னர் உஜ்ஜல்சிங் சரியாக காலை 7-55 க்கு அங்கு வந்து சேர்ந்தபோது அவரை தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனும் அரசாங்க தலைமைச் செயலாளரும் எதிர்கொண்டு வரவேற்று மேடைக்கு அழைத்து வந்தனர்.

முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை உடல் நலம் குன்றியிருப்பதால் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவில்லை.

முப்படை, பொலிஸ்படை அணிவகுப்பைத் தொடர்ந்து ராஜ்யத்தின் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்தையும் குறிக்கும் அலங்கார வண்டிகளின் பவனியும் நடைபெற்றது.

# இந்திய மூலதனத்துடன் இலங்கையில் உற்பத்தி

## இங்கு தயாராகும் பொருட்களை இந்தியா வாங்குவதென முடிவு

கொழும்பு, ஞாயிறு

இந்திய மூலதனத்துடன் இலங்கையில் பல கைத்தொழிற்சாலைகளை நிறுவி, அதில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இந்திய அரசாங்கம் வாங்குவதென்ற முடிவு இன்று நடைபெற்ற இலங்கை-இந்திய வர்த்தக பொருளாதார பேச்சு வார்த்தையின் போது எடுக்க[illegible]ட்டது. கைத்தொழில் அபிவிருத்தி பற்றி [illegible]ய்வதற்காக இருநாட்டு கூட்டுக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

இலங்கை-இந்திய வர்த்தக பொருளாதார உறவுப் பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்குமிடையில் மந்திரிகள் கட்டத்தில் இன்று நடைபெற்றுமுடிவடைந்தது. இலங்கை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும், இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ்சிங்கும் பேச்சுவார்த்தைகளுக்கு இரு தரப்பிலும் தலைமைதாங்கினர்.

இரு நாடுகளுக்குமிடையிலான கைத்தொழில் அபிவிருத்தி பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட இக்குழு, இலங்கையில் நிறுவப்படவிருக்கும் கைத்தொழில் நிலையங்கள் பற்றியும், அபிவிருத்தி கூட்டு ஒப்பந்தம் பற்றியும் ஆராய்ச்சி நடாத்தும். மார்ச் மாதம் இது பின்னர்கூடி, தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

உரம்உற்பத்தி, கட்டடக்கலை, உப்பு உற்பத்தி, கமத்தொழில், றபர், தேங்காய் உற்பத்தி போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்காக தொழிற்சாலைகள் இலங்கையில் நிறுவப்படும். இந்திய மூலதனத்துடன் நிறுவப்படவிருக்கும் இக்கைத்தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படும் பொருட்களை இந்திய அரசாங்கம் இலங்கையிடமிருந்துபெற்றுக்கொள்ளும்.

இலங்கையில் நிறுவப்படவிருக்கும் கைத்தொழிற்சாலைகளில் கடமையாற்றும் ஊழியர்கள், இலங்கையிலிருந்து இந்தியாசென்று, அங்கு தொழில் நுட்பத்துறைகளில் பயிற்சிபெற்ற பின்னர் இங்கு நியமிக்கப்படுவர். இலங்கையிலிருந்து இந்தியா சென்று பயிற்சி [illegible] அனுப்பப்படவிருக்க 300 பேரும் வருகிற அக்டோபர் மாதம் முதல் இந்தியாவில் பயிற்சிபெறுவர்.

வர்த்தகர்கள், தொழிலதிகாரிகள் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய உறவு வைத்திருப்பதற்காக அவர்களின் பிரயாண கட்டுப்பாடு நீக்குதல் பற்றியும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

## இலங்கையில் மிகப்பெரிய பயங்கரத் திருட்டு

### ஹட்டனுக்கு பொலிஸ விரைந்தது

கொழும்பு ஞாயிறு

இலங்கையில் நடைபெற்ற களவுகளில் மிகப் பெரியதும் பயங்கரமானதும், துணிச்சலானதுமெனக் கூறப்படும் களவொன்று நேற்று ஹட்டன் பகுதியிலுள்ள நோர்வூட் என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான துப்பாக்கிச் சன்னப் பவுடர், டைனமட் மருந்து மலைகள் பாறைகளை பிளக்கும் சுமார் 1512 தகட்டுஇணைப்பு வயர்கள் ஆகியன நோர்வூட்டிலுள்ள பொதுவேலைப் பகுதிகளஞ்சிய அறையிலிருந்து களவாடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

களவு போனதாகத் தகவல் கிடைத்த சிலமணிக்குள்ளேயே இதுபற்றிபுலன் விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய கொழும்பிலிருந்து விசேஷ பொலிஸ் படையொன்றை பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன அனுப்பி வைத்தார். அத்துடன் உயர்தர பொலிஸ்அதிகாரி ஒருவரும் இதுபற்றிய விசாரணையை மேற்கொள்ள ஹட்டன் பகுதிக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் நடைபெற்ற பல களவுகளிலும் பெரிய அளவில் நடைபெற்ற பயங்கரமான களவாக இது இருப்பதாக பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். களவாடப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்படா விட்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தில் மூவருக்கு துப்பாக்கிச் சூடு

### தாயும் இரு பிள்ளைகளும் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், திங்கள்

வீட்டு வெளி விருந்தையில் ஒன்றாக இருந்து கதைத்துக்கொண்டிருந்த ஒரு தாயும், அவரது பிள்ளைகளான வாலிபனும் யுவதியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயத்துக்குள்ளானார்கள், இதை அடுத்து மற்றொருவரும் துப்பாக்கியால் சுடப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தப் பரிதாப சம்பவம் கடந்த இரவு சாவகச்சேரி பொலிஸ்பகுதியைச் சேர்ந்த தச்சன்தோப்பு என்ற இடத்தில் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள பாக்கியம் (42 வயது) என்ற தாயும், அவரது பிள்ளைகளான தங்கராஜாவும் (18வயது) முத்துமலருமே (16 வயது) துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாயத்துடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். இராஜதுரை (24 வயது) என்ற அதே இடத்தைச் சேர்ந்த மற்றொரு வாலிபரும் பின்னர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தச்சன்தோப்பில் கடந்த இரவு நடைபெற்[illegible] கைகலப்பைத் தொ[illegible]

(8-ம் பக்கம்பார்க்க)

## இலங்கை திரைப்படத் தயாரிப்பாளருக்கு உதவி

இலங்கையில் தயாரிக்கப்படும் தமிழ் - சிங்கள படத் தயாரிப்பாளர்களுக்கு இந்திய படத் தயாரிப்பாளர்களின் உதவி கொடுக்கவும் இங்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இந்திய படத் தயாரிப்பாளர்களின் உதவி கொடுக்கவும் இங்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இந்திய திரைப்படக்காரரின் உதவி மிகவிரைவில் இலங்கைக்கு கிட்டும்.

இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ்சிங் இன்று இரவு விமானமூலம்இந்தியா பயணமானர். திரு-தினேஷ் விமானத்தில் புறப்படுமுன் விமானநிலையத்தில் பேசுகையில் ஆசிய பொதுச்சந்தைக்கு இலங்கை - இந்திய பொருளாதார பேச்சுவார்த்தைகள் வழிவகுத்துள்ளன என்றார். இப்பேச்சுவார்த்தை மீண்டும் மேமாதம் இந்தியாவில் நடைபெறும்.

## வேலை நிறுத்தம் செய்யாத ஊழியர்களை பயமுறுத்தல்

### அரசாங்க தீவிர கண்கணிப்பு

கொழும்பு, ஞாயிறு

அண்மையில் நடைபெற்ற அரசாங்க ஊழியர்களின் வேலைநிறுத்தத்தில் ஈடுபடாமலிருந்தஊழியர்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள்பயமுறுத்துகிறார்களாம். இச்சம்பவம் மந்திரி சபையில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபடாமலிருந்த ஊழியர்கள் அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டியதைத் தொடர்ந்து இச்சம்பவம் மந்திரி சபையில் பேசப்பட்டது. பயமுறுத்தலில் ஈடுபடுபவர்களை அவதானிக்கும்படியும், அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் சகல நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இத்தீர்மானம் மந்திரிசபையில் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
**நான் யார் தெரியுமா?**

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45,
7-00, & 9-45 p. m.
**PASSPORT TO HELL**
Secret Agent 3 S 3
(color-scope)

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 3 காட்சிகள் மாலை 2-30, 6-30, 9-30 மணி
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
மற்றும் பலர் நடித்த
**பொன்னன வாழ்வு**
யாழ் நகரில் திரையிடப்படாத புத்தம் புதிய வெளியீடு!

2-வது வாரம்
கிங்ஸ்லி ராஜ் (நீர்கொழும்பு)
பிளாஸா விஜயா (மட்டுநகர்)
மக்கள்திலகம் நடிகையர்திலகம்
எம்.ஜி.ஆர் ★ சாவித்திரி
எம். ஆர். ராதா, நாகேஷ்,
மற்றும் பலர் நடித்த
கௌரி பிக்சர்ஸ்
**பரிசு**
டைரக்ஷன் யோகானந்
இசை கே. வி. மகாதேவன்

**வெலிங்டன்** யாழ் நகர்
தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு
எஸ். எஸ். ஆர், தேவிகா
நடித்த
மு. கருணாநிதியின்
**மறக்க முடியுமா!**
(சிலதினங்களுக்கு மட்டும்)

30-ம் திகதி முதல்
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த
**அலிபாபாவும் 40 திருடர்களும்**


# வரி விளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத. இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் சுந்தசாமி, குபத வித்யாதணய, நிட்டம்புவ. 495

## விற்பனைக்கு

ஒலிபெருக்கிக்கும் சிறு வைபவங்களுக்கும் பாவிப்பதற்குரிய லைட் மெசின் விற்பனைக்கு உண்டு. ஏ. எஸ். அரசரட்ணம், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 629

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மாடி வீடு விற்பனைக்கு உள்ளது. நேரில் விண்ணப்பிக்கவும். ச. சிவஞானம், 53, பிரதானவீதி, யாழ்ப்பாணம் அல்லது ராசு பத்திரஞு பல்வைத்திய சாலை, மெயின்வீதி, அநுராதபுரம். 628

காணி:
யாழ்ப்பாணம், பலாலி வீதியில், திருநெல்வேலியில், பரமேஸ்வராக்கல்லூரிக்குக் கிழக்குப்பக்கமாக மூன்று பரப்புக்கு மேற்பட உள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ச. பொன்னையா ஆசிரியர், இராணி இல்லம், சங்கத்தானை, சாவகச்சேரி. 625


2-வது வாரம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
**ஒளி விளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**என் தம்பி**


## கல்வி

வைகாசி 15-ம் திகதி நடக்கவிருக்கும் மத்திய எழுதுவினைஞர் பரீட்சைக்கு நெடுங்கூட்டல் உட்பட எண்கணிதம், பொது விவேகம், மொழியும் வியாசமும், பொது அறிவும், இலங்கையைப் பற்றிய அறிவும் அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியர்களால் இரு பாலாருக்கும் கற்பிக்கப்படுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. (1924ம் ஆண்டு தொடங்கியது) 631

## கி. ச. புதிய அலுவலகம்

அராலி, ஞாயிறு
புதிய அராலி கிராமசபையின் அலுவலகம் அராலி உபதபாற்கந்தோருக்கு எதிரிலுள்ள ஒரு வாடகை வீட்டில் திறந்துவைக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திருமதி அம்பிகை

காலஞ்சென்ற F. M. S. பென்சனியர் வட்டுக்கோட்டை மேற்கு நாகமுத்து சின்னப்புவின் மனைவியும், யாழ்ப்பாணம் தேர்தல் கந்தோரைச் சேர்ந்த வேலுப்பிள்ளையின் தாயாரும், கண்மணியின் மாமியாருமான திருமதிஅம்பிகை நேற்று நண்பகல் சிவபதமடைந்தார். அன்னாரது பூதவுடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் செம்மணி மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும். 630

## திருமண அழைப்பு

### ஜெகநாதன்—ஜோதிப்பிள்ளை

காலம்: 28-1-69 செவ்வாய்க்கிழமை
நேரம்- அதிகாலை 4-30—5-30 க்கும் வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்தம்.
மணமகன்: **ஜெகநாதன்**
(ஆசிரியர், நெல்லியடி மகா வித்தியாலயம்)
மணமகள்- **ஜோதிப்பிள்ளை.**
திருமணம் நடைபெறும் இடம்- மணமகள் இல்லம், மட்டுவில்.
வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 28, 29-ம் திகதிகளில்.
மணமகள் இல்லத்தில் 30-1-69-ல் (3 மணி முதல் இரவு 9 மணி வரை)

திரு. ரங்கநாதன் பாரியார், 'நாதன் வாசா' புத்தூர்.
திரு. சந்திரசேகரம் பாரியார், மட்டுவில்.
1166

## திருமண அழைப்பு


அன்புடையீர்,

நிகழும் கீலக வருடம் தை மாதம் 18ஆம் திகதி (31-1-69) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-15 முதல் 10-45க்குள் வரும் சுபநேரத்தில்

எங்கள் புதல்வி திருநிறை செல்வி
**சாந்தாவுக்கும்**
பதுளை செ. சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் புதல்வன்
**சந்திரசேகரனுக்கும்**

கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தில் திருமணம் நடைபெறுவதால் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை அன்பு அழைப்பாக ஏற்று திருமண வைபவத்தில் கலந்துகொண்டு தம்பதிகளை வாழ்த்தியருள வேண்டுகின்றோம்.

ஜகஜோதி கம்பெனி,
14, திருகோணமலைவீதி,
கண்டி.
தங்கள் அன்புள்ள
ரா. மு. நாகலிங்கம் தம்பதிகள்
1162

எம்- ஜி. ஆர். இதுவரை நடித்துமுடித்த 100 படங்களிலும் முதற்றரமானதும் தென்னாட்டில் அதிக வசூலைப் பெற்று பெருஞ் சாதனையை உண்டாக்கியதும், தனக்குப் பிடித்தமானபடமும் "குடியிருந்த கோயில்" என்பது எம். ஜி. ஆரின் தீர்ப்பு.

**வின்ஸர் - றீகல்**
ஆகிய இரு திரைகளிலும்
**இப்பொழுது நடைபெறுகிறது**
**தினசரி 4 காட்சிகள்**

வின்ஸர் காட்சி நேரங்கள்! காலை 10-00, பிற்பகல் 2-00, 6-00, 9-00.
றீகல் காட்சி நேரங்கள்: காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-30.

★ எம். ஜி. ஆர். (இருவேடங்களில்) ★ ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், ராஜஸ்ரீ நடித்த
G. N. வேலுமணி அளிக்கும்
**குடியிருந்த கோயில்**
(முழு நீள ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்: K. சங்கர்
கதை வசனம்: 'சொர்ணம்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாயிரம் வீரர் கலந்துகொண்ட முப்படை அணிவகுப்பு

## புதுடில்லியில் இந்திய குடியரசுதினவிழா

புதுடில்லி, ஜன. 26

இந்தியக்குடியரசின் பத்தொன் பதாவதாண்டுவிழா இந்தியநாடு முழுவதும்மிகக் கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றது. தலைநகரான புதுடில்லியில் செங்கோட்டையின்முன்னே லட்சக்கணக்கான மக்கள்ஜாதி, மத, இன, மொழி பேதமின்றி திரண்டு நிற்க முப்படைகளின் அணிவகுப்பு ஊர்வலங்களும் கலாசாரப் பவனியும் நடைபெற்றன.

முப்படை அணிவகுப்பில் பத்தாயிரம் வீரர்கள்கலந்து கொண்டனர். செங்கோட்டைமீது இந்தியக் குடியரசுத் தலைவர் தலைவர் டாக்டர் ஸாகீர் ஹுசெயின், பிரதமர் திருமதி இந்திரா காந்தி முப்படைகளின் தளபதிகள் ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர். அலங்கார கலாசாரப் பவனிகளையும் அவர்கள் கண்டுகளித்தனர்.

அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், காலஞ்சென்ற நீக்ரோத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் மனைவி திருமதி கொரேட்டா கிங், மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள் ஆகியோரும்மேடைக்கருகே அமர்ந்திருந்தனர்.

முப்படை அணிவகுப்பில் ஆவடியில் உற்பத்தி செய்யப்பட்ட டாங்கிகளும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பீரங்கிகளும் இடம் பெற்றன, ஏவுகருவியும் அணிவகுப்பு ஊர்வலத்தில் இடம் பெற்றது. ஹெலிகாப்டர்கள் உட்பட பல்வேறு ரக விமானங்களுமாக மொத்தம் 166 விமானங்கள் அணி அணியாக வானவெளியில் பறந்து விழாவுக்கு மேலும் மெருகூட்டின.

பவனியில், வீரதீரச் செயல்களுக்குப் பரிசு பெற்ற சிறுவர்கள் யானை மீது வந்த போது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அணிவகுப்பு கலாசார அலங்கார ஊர்வலம் முடிந்ததும் பலவர்ண பலூன்கள் ஆகாயத்தை நோக்கிப் பறந்து அழகூட்டின.

## பிரிட்டனின் யோசனை

லண்டன், ஜன. 26

மேற்காசியப் பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வு காண்பதற்கென நான்கு வல்லரசு மகாநாடு நடைபெற வேண்டுமென பிரான்ஸ் தெரிவித்து சோவியத் யூனியன் ஆதரவளித்த யோசனைக்கு பிரிட்டனும் ஆதரவு தெரிவித்துள்ள போதிலும் நான்கு வல்லரசுப் பேச்சு வார்த்தைகளும் ஐ. நா. அமைப்பின் கீழும் அதன் ஆதரவிலும்தான் நடைபெற வேண்டுமென்றும் எந்த முயற்சியும் மேற்காசிய பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்து தரும் ஐ. நா. பிரதிநிதி டாக்டர் ஜாரிங்கிற்கு உதவி செய்வதற்காக வே இருக்க வேண்டுமென்றும் பிரிட்டன் கருதுகிறது.

## திருட்டு வழக்கில் தீர்ப்புஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பொலநறுவையைச் சேர்ந்த அகமட் லெட்பே முஸ்தபா என்னும் இளைஞன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆர். பிலிப்குமார் என்னும் ஏழு வயதுச் சிறுவனிடமிருந்து இம்மாதம் 3-ந் திகதி ரூபா 800 பெறுமதியான தங்கச்சங்கிலியைகளவாடியதாக வல்வெட்டித் துறைப்பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின்போதுஎதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்திரேட் எதிரியை கையடையாளம் கொடுக்கும்படி உத்தரவிட்டு அடுத்தமாதம் 7-ந் திகதிவரைறிமாண்டில்வைக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## பாரிஸ் மகாநாடு

# படைவிலக்க பிரதேச யோசனை நிராகரிப்பு

பாரிஸ், ஜன. 26

வியட்நாம் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணுமுகமாக விஸ்தரிக்கப்பட்ட பேச்சு வார்த்தைகள், பலமாதங்களாகச் செய்யப்பட்ட முயற்சியின்பயனக, நேற்று நடைபெற்றது. இந்த முதல் கூட்டம் 6மணிநேரம் நீடித்தது.

வடக்கு வியட்நாமுக்கும் தெற்குவியட்நாமுக்குமிடையில் மீண்டும் படைவிலக்கப்பிரதேசத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் அமெரிக்க தூதுக்குழுவின் தலைமைப்பிரதிநிதி ஹென்றி கபட் லொட்ஜ் தெரிவித்த யோசனையை வடக்கு வியட்நாம் பிரதிநிதிகளும் தேசியவிடுதலை முன்னணியினரும் நிராகரித்து விட்டனர். இந்த யோசனை ஆக்கிரமிப்பை மூடிமறைப்பதற் கானஒரு திட்டம் என அவர்கள் தெரிவித்தனர்.

சைகோனில் புதிய கலப்பு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும் புதிய சமாதான அரசாங்கமாக விளங்கக் கூடிய இந்த அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் நேரடியான கண்காணிப்பிலும் வியட்நாமில் தேர்தல் நடைபெற வேண்டும், அப்போதுதான் வியட்நாம் இணைப்பு சரியாக அமையுமென்றும் வடவியட்நாம் பிரதிநிதிகளும் தேசீய விடுதலை முன்னணியினரும் தெரிவித்தனர். வியட்நாமிலிருந்து அமெரிக்கர் வெளியேற வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அடுத்த கூட்டம் வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## வெள்ளையரல்லாதார்

# பிரிட்டனில் குடியேறுவதை தடுப்பது அவசியம்

### கன்ஸர்வேடிவ் தலைவர் கூறுகிறார்

லண்டன், ஜன. 26

வெள்ளையரல்லாதார்பிரிட்டனில் வந்து குடியேறுவதற்கு இன்னும் கடுமையான முறையில் தடைவிதிக்கப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ் கன்ஸர்வேட்டிவ் கட்சித்தலைவர் திரு. எட்வர்ட்ஹீத் தெரிவித்திருக்கிறார்.

வெள்ளையரல்லாதார் பிரிட்டனில் குடியேறுவதை தடுப்பதற்கு அவசியமானல் புதிய சட்டவிதிகளையாவது கொண்டுவர வேண்டுமென திரு. ஹீத் பிரிட்டனின் தொழிற்கட்சி அரசாங்கத்துக்கு யோசனை தெரிவித்தார். வெள்ளையரல்லாதார் பெருமளவில் பிரிட்டனில் குடியேறுவதற்கு கட்டுப்பாடுவிதிக்கப்படாவிட்டால் பெரும் ஆபத்தான நிலை ஏற்படலாமென்றும் இதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரஜைகளாக வெளிநாடுகளிலிருந்து அந்நாடுகளால் வெளியேற்றப்படுவோருககு பிரிட்டனில் இடமளிப்பதற்குப் பதிலாக அவர்களுக்குத் தாராளமாக நிவாரண உதவி வழங்கி, அவர்களைத் தங்கள் சொந்த நாடுகளுக்குப் போய்ச்சேருவதற்குத் தூண்டவேண்டுமெனவும்திரு. ஹீத் யோசனை தெரிவித்திருக்கிறார்.

## தீக்குளித்த செக். மாணவரின்

# ஈமச்சடங்குகள் அமைதியாக நடந்தன

பிராக், ஜன. 26

சோவியத் ஆக்கிரமிப்பையும் பத்திரிகைத் தணிக்கையையும் எதிர்த்து தனக்குத்தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்ட ஜோன்பாலாக் என்ற மாணவனின் இறுதிச் சடங்குகள் நேற்று எதுவித அசம்பாவித சம்பவமும் இன்றி நடந்து முடிந்தது.

பல்லாயிரக் கணக்கான செக்கோஸ்லவாக்கிய மக்கள் உயிர்த்தியாகம் செய்த மாணவனுக்கு தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். ஈமச் சடங்கின் போது அசம்பாவித சம்பவங்கள் நிகழலாம் என எதிர்பார்த்த செக். தலைவர்கள் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்ளும்படியும் இல்லையேல் நிலைமையைச் சமாளிக்க இராணுவத்தை அழைக்க நேரிடுமென்றும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

ஈமக்கிரியைகளுக்கு முதல் நாளே சம்பவங்களை மிகைப்படுத்திச் செய்திகள் அனுப்பியதாக வெளிநாட்டுச் செய்தி நிருபர்கள் பலர் பிராக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

## மேடை ஏற்றுவர்

அராலி, ஞாயிறு

அராலி செம்பிதோட்ட வைரவராலய பஜனை மன்றத்தினர் எதிர்வரும் சிவராத்திரித் தினத்தன்று தமது ஐந்தாவது நாடகமாக 'பவளக் கொடி'யை மேடை ஏற்ற சகல ஏற்பாடுகளும் செய்துவருகின்றனர். அதே தினத்தில் அராலி முருகன் சன சமூக உறுப்பினர்களும் 'அரிச்சந்திரன்' சரிதையில் மயான காண்டத்தை நாடகமாக மேடைஏற்ற ஒத்திகையும் நடத்திவருகிறார்கள்.

## கிழக்குப் பாகிஸ்தானில்

# பொலிஸார் சுட்டதில் மேலும் இருவர் பலி

### கராச்சியில் பலர்கைது

டாக்கா, ஜன. 26

கிழக்குப் பாகிஸ்தானில் நேற்று நடந்த பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் மேலும் இருவர் கொல்லப் பட்டனர்; 25 பேர் காயமடைந்தனர்.

டாக்காவில் நேற்றுமுன் தினம் பிறப்பிக்கப்பட்ட 24 மணிநேர ஊரடங்கு உத்தரவு நேற்று மேலும் 24 மணி நேரத்துக்கு நீடிக்கப்பட்டது. மக்கள் கடைகளுக்குச் சென்று பொருள் வாங்குவதற்கென இன்று முற்பகல் மூன்றுமணிநேரத்துக்கு ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது.

நாராயண் கஞ்ச், குல் நார் ஆகியபகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. கராச்சியில் ஊரடங்கு உத்தரவுபிறப்பிக்கப்பட்டபகுதியில் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை. கராச்சியில் நிலைமையைச் சமாளிப்பதற்கு பொலிஸ்படை பலப்படுத்தப் பட்டிருப்பதாகவும் அவசியம் ஏற்பட்டால் இராணுவம் அழைக்கப்படுமென்றும். கராச்சி மாவட்டகமிஷனர் தெரிவித்தார்.

குல் நாரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தடையைமீறி ஊர்வலம் நடத்தியதுடன் பஸ்களுக்கும் தீவைக்க முயன்ற அவர்களைக் கட்டுப்படுத்தமுடியாமல் போகவே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் இருவர் கொல்லப் பட்டனர்.

சிட்டகொங் ராஜ்சாஹி, சியால்கோட், சர்கோடா ஆகியஇடங்களிலும் ஆர்ப்பாட்டக்காரர் ஊர்வலங்கள் நடத்தினர். கோடாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இரண்டுபஸ்களுக்குத்தீவைத்துச் சேதப்படுத்தியதுடன் ஒரு பெட்ரோல் தாங்கியையும் சேதப்படுத்தினர். இங்கும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கராச்சியில் நேற்று 225 பேர் கைது செய்யப்பட்டனர்.

டாக்காவில் நேற்று ஊரடங்கு உத்தரவை மீறி வெளியே நடமாடியவர்கள் மீது பொலிசார் சுட்டதில் ஆறுபேர் காயமடைந்தனர்.

# இ. போ. ச சாரதி கொலை வழக்கில் தீர்ப்பு

காலி, ஞாயிறு

இ. போ. ச. சாரதியொருவரை கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எல். டி. யோன் என்பவருக்கு 4 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

காலி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வி. ரி. பண்டித குணவர்த்தன முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கொலைசெய்யும் நோக்கத்துடனல்லாது செய்த கைமோசக் கொலையென ஜூரிகள் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் இவ்வித தீர்ப்பை வழங்கினார்.

இ. போ. ச. சாரதியான திரு. ஏ. எஸ். ஏ. டேவிட் என்பவரை 1967ம் வருடம் அக்டோபர் 26ந்திகதி தடிகளால் தாக்கியும் அசிட் திராவகம் வீசியும் கொலை செய்ததாக தல்கம்போலவைச் சேர்ந்த பத்து பேர்மீது தொடரப்பட்டிருந்த வழக்கில் மற்ற 9 பேரும் விடுதலை செய்யப் பட்டனர். அக்மீமன பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

## புனரமைப்பு

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு மக்களின் நீண்டநாள் அபிலாசையில் ஒன்றான கிராம முன்னேற்றச் சங்க புனரமைப்பு வேலைகள் விரைவில் நிறைவேறவுள்ளன. சங்க புனரமைப்பு வேலைகள் வலிமேற்கு கிராமாதிகாரி திரு. வி. சுப்பிரமணியத்தால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

## எல்லாத் தொகுதிகளிலும் கிளைகள் அமைக்கும்

கோப்பாய், ஞாயிறு

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நாடு முழுவதும் தேசியரீதியில் 11 கிளைகளை அமைத்துள்ளதெனவும் இலங்கை ஆட்சிமன்றத் தொகுதிகள் முழுவதிலும் கிளைகள் அமைத்தபின்னரே போராட்டத் தீர்மானம் நிறைவேற்றப்படுமெனவும் அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்க உத்தியோகத்தர் ஒருவர் நமது நிருபரிடம் கூறினார். தென்னிலங்கையில் திரு. ஸி. விஜேயானந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

''பக்தி வெறும் உணர்ச்சிப் பெருக்கினுல் ஏற்படும் பரவசமான ஒரு நிலை மாத்திரமல்ல; பணிவே உருவான பூரணநிலையும் உயிர்வாழும் எல்லாவற்றுக்கும் தொண்டு செய்வதும், தனக்குப் புறம்பாகவுள்ள மற்றவை என்ற வேற்றுமை உணர்ச்சியையும், துவேஷத்தையும் ஒழிப்பதுவே பக்தி.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 14-ந் திகதி
(27-1-69)


## பாகிஸ்தான் சம்பவங்கள்

கிழக்கு, மேற்குப்பாகிஸ்தானில் பல நகரங்களிலும் சென்ற இரு தினங்களில் ஆர்ப்பாட்டங்கள், கலகங்கள் தீவிரமடைந்து பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு சில உயிர்கள் பலியாகியுள்ளன. அயல்நாடான பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் இச் சம்பவங்கள் குறித்து இலங்கை மக்கள் கவலைப்படக் காரணமுண்டு.

பாகிஸ்தானில் பீல்ட் மார்ஷல் அயூப்கான் ஆட்சிக்குவந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அயூப் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் அங்கு ஜனநாயக ஆட்சி முறை அமுலிலிருந்தாலும் ஸ்திரமான அரசியல் அமைப்பு தவறியதால் பதவிப் போட்டிகளும் அதிகாரப் போட்டிகளும் அதிகரித்து அந்நாட்டு மக்கள் பல வகையிலும் கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டது. அயூப் ஆட்சி ஏற்பட்டபின்னர் அங்கு ஜனநாயக அரசியல் அமைப்பு முறை நீங்கியபோதிலும் அங்கு அரசியலில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டது. அந்நாடு பல வகையிலும் முன்னேற்றமும் கண்டிருக்கிறது. ஆனாலும் ஜனநாயக அரசியல் அமைப்பில் பதவிப்போட்டிகளும் அதிகாரப்போட்டிகளும் கண்டு அந்நாட்டு மக்களுக்கு எப்படி அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டதோ அதேபோல் பத்தாண்டுகாலம் ஒரே விதமான அயூப்பின் ஆட்சியிலும் ஓரளவு சலிப்பேற்படுவதில் ஆச்சரியமுமல்ல; அநியாயமுமல்ல. மக்கள் மனதில் பொதுவாக ஏற்படக்கூடிய இந்தச்சலிப்பை அங்கு வேறுபலர் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள முன்வந்திருப்பதும் விந்தையல்ல. அயூப்பின் வலதுகரம் போல் விளங்கிய பாகிஸ்தானின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான ஸுல்புகார் அலி புட்டோ, பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி ஏற்படவேண்டுமென்றும் அங்கு மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் கிடைக்கவேண்டுமென்றும் கோரி புதிய கட்சி ஒன்றையும் ஆரம்பித்தார். அவரது ஜனநாயக இயக்கம் கலகங்களுக்கு வழிவகுத்ததால் கலகத்தைத் தூண்டிவிட்டதாகவும் அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டி அயூப் அரசாங்கம் அவரைச் சிறையில் அடைத்துவைத்திருக்கிறது. ஆனாலும் முன்னாள் விமானப்படைத் தளபதி அஷ்கர்கான் புதிய இயக்கத்துக்குத் தலைமைதாங்கவும் புட்டோவும் மற்றும் தலைவர்களும் சிறையிலடைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு மேலும் கலகம் தோன்றி தீவிரமடைந்திருக்கிறது. ஜனப் புட்டோ அயூப் அரசாங்கத்தில்வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது ஜனநாயக உரிமை கோரியவர்களைச் சிறையிலடைக்கக் காரணமாக இருந்தார் என்பதை அந்நாட்டு மக்கள் மறந்துவிடமுடியாது. என்றாலும் மக்கள், ஆட்சியில் ஒரு மாறுதலை விரும்புகிறார்கள் என்பதை அதிபர் அயூப்கான் உணர்ந்து மக்களின் விருப்பத்துக்கேற்ப ஆட்சிமுறையில் மாறுதல் செய்து மக்கள் தம்மீது வைத்த அன்பையும் அபிமானத்தையும் நம்பிக்கையையும் நிலைநாட்ட முன்வருவது அவருக்கும் நல்லது; நாடு அராஜகவழியில் செல்லாமல் தடுப்பதற்கும் நல்லது.

இதே சமயம் ஜனநாயக ஆட்சி அமைப்பு நிலவும் நாடுகளும் ஜனநாயக முறையல்லாத சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகளும்சரி மக்களின் குறைகளை உணர்ந்து அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளில் காலதாமதம் செய்யக்கூடாது என்பதற்கு பாகிஸ்தானின் இன்றைய சம்பவங்களும் அன்றைய சம்பவங்களும் ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும்.

## ஆசிரியர்களுக்கு 'அறிவுரை'

'ஆசிரியர்கள் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகக் கூடாது' என்று ஓர் அரசியல் வாதியான அநுராதபுர ஆட்சிமன்றப் பிரதிநிதி திரு. கே.பி.இரத்நாயகா சமீபத்தில் அநுராதபுரத்தில் நடந்த தேசிய ஆசிரியசங்க வருடாந்த மகாநாட்டில் ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறியிருந்தார். அரசியல் வாதிகள் ஆசிரியர் விஷயத்தில் தலையிடக்கூடாதென்று ஆசிரிய சங்கங்கள் இடையிடையே கூறுவதும் அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகளாக ஆசிரியர்கள் விளங்கக்கூடாது என்று அரசியல்வாதிகள் சிலர் அடிக்கடி கூறுவதும் இங்கு புதுமையல்ல. ஆனாலும் அரசியல் வாதிகளின் தயவை ஆசிரியர்கள் பலபல காரணங்களுக்காக நாடுவதும் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக ஆசிரியர்களின் தயவையும் ஆதரவையும் அரசியல் வாதிகள் தேடுவதும் இங்குவியப்பல்ல.

அறிவும் நேர்மையுமுள்ளவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட சுதந்திரமான கல்விச் சேவைக் கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும் அது இந்நாட்டின் கல்வித் துறையிலுள்ள சீர்கேடுகளை நீக்க உதவவேண்டுமென்றும் திரு.இரத்நாயகா கூறியிருக்கிறார். இது நல்ல யோசனை தான். இந்த யோசனையை ஆசிரிய சங்கங்களும் பலவருடங்களாக வற்புறுத்தி வருகின்றன. ஆனாலும் எதுவும் செயல்படுவதாகக் காணோம். தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியின் தரத்தைப் பாதுகாக்கவும் தமிழ் அறிஞர்களையும் கல்விமான்களையும் கொண்ட கல்வி ஆலோசனைச்சபையொன்று நியமிக்கப்படவேண்டுமென தமிழ்த் தலைவர் ஒருவர் யோசனை தெரிவித்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் அது யோசனையாகவே இருக்கிறது.

கல்விச்சேவைக் கமிஷன் நியமிப்பதற்குமுன்னர் அரசியல் வாதிகளும் ஆசிரிய சங்கங்களும்சேர்ந்து தேசிய அடிப்படையில் கல்வி ஆலோசனைச்சபையொன்றை நியமிக்கலாமே!

குழந்தைகள் உட்பட 42 பேர் உயிருடன் கருகிமா[...]

# வெண்மணிக் கிர[...]
# பிரச்னைகளுக்கு காரண[...]

''இங்கு 144 தடை உத்தரவு போட்டிருக்கிறது. மூன்று பேருக்கு மேல் சேர்ந்து செல்லப்படாது; நில்லுங்கள்.''

இவ்வாறு ஒரு பொலிஸ் அதிகாரி, வெண்மணி கிராமத்துக்குள் நாங்கள் ஐவர் செல்லுகையில் தடுத்து நிறுத்திக் கேட்டார்.

வெண்மணி கிராமத்திலே சென்ற டிசம்பர் மாதம் 25ந் திகதி இரவு 42 பேர் தீக்கிரையாக்கப்பட்டகோர நிகழ்ச்சிகளை இலங்கையிலிருக்கையில் கேட்டுத் திடுக்கிட்டேன். பல பாடல் பெற்ற ஸ்தலங்களும், உலகமே அதிசயிக்கும் கலைக் கோவில்களும், நீர்வளமும், நிலவளமும் மல்கிய அமைதியும் பண்பும் மிக்க சோழவள நாட்டிலே இவ்வித அன்பற்ற செயல்கள் நடந்துள்ளதைக் கேட்க யார்தான் வேதனைப் படமாட்டார்கள்? அந்த இடத்துக்கு நேரில் சென்று அங்கு நடைபெற்றுள்ள சம்பவங்களுக்கான அடிப்படைக் காரணங்களை அறியவும், இனி இவ்விதம் நடைபெறுமல் தடுக்க என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றிச் சிந்திக்கவும் ஆவல் கொண்டு தஞ்சாவூரிலே சில அன்பர்களை விசாரித்தேன்.

மாவட்ட கலெக்டர் (கவர்மெண்ட் ஏஜென்ட்) தான் அதிகாரபூர்வமான செய்திகளைக் கூறுவார் என்பதை அறிந்து, அவரது காரியாலயத்துக்கு காலை சுமார் 11 மணிக்குச் சென்றேன். அவர் பங்களாவில் இருப்பதாகவும் அங்கு நேரில் சென்று கேட்கலாமென்றும், அங்கிருந்த உதவி அதிகாரி கூறினர். தாம் புதிதென்றும் தமக்கு திட்டமாக எதுவும் தெரியாதென்றும் சொன்னர். பத்திரிகைக்காரரைக் கண்டால் அதிகாரிகளுக்கு சந்தேகமும் ஒருவித அச்சமும் ஏற்படுவது சகஜம்தானே இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் வல்லம் ரஸ்தாவிலுள்ள கலெக்டர் பங்களாவுக்குச் சென்றேன். அங்கும் அவரில்லை. எங்கு சென்றிருப்பாரென்று அங்கிருந்தவர்களுக்கும் தெரியாது. மத்தியானச் சாப்பாட்டுக்கு எப்படியும் வருவாரென்பதை அறிந்து அங்கிருந்த 'கெஸ்ட் ஹவுஸில் 2-40 மணி வரை காத்திருந்தேன். கலெக்டர் ரங்கபாஷியம் அவர்கள் வரக் காணோம். அவருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்தேன். வெண்மணி கிராம நிகழ்ச்சிகளைப்பற்றிய உண்மைகளை அறிய இலங்கையிலிருந்து பத்திரிகைக்காரரென்ற முறையில் வந்திருப்பதாகவும், வசதியான ஒரு நேரத்தையும் இடத்தையும் தெரிவித்தால் வந்து காண்பதாகவும் எழுதி வைத்து, எனது விலாசத்தையும் குறிப்பிட்டு விட்டு வந்தேன். மறுநாளே

### ஐயர்ரன் எழுதுவது

அவரிடமிருந்து ஒரு பதில் கிடைத்தது. தமக்கு அதிக வேலைத் தொந்தரவுகள் இருப்பதால் ஐந்தாறு நாட்களுக்கு தமக்கு வசதியில்லை என்றும் நாசப்பட்ட இடத்திலுள்ள உதவிக் கலெக்டரைக் கண்டால் அவர் விவரங்களைத் தெரிவிப்பாரென்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

ஒருவித ஏமாற்றத்துடன் தஞ்சை சீனிவாசபுரத்திலுள்ள 'சர்வோதய' காரியாலயத்துக்குச் சென்றேன். அங்கிருந்துதான் 'சர்வோதய' ஆங்கில, தமிழ் மாளிகைகள் வெளியாகின்றன. விடுதலைப் போராட்டத்திலே பன்முறை சிறை சென்ற திரு. எஸ். ராமசாமி அவர்களும் அவரது மனைவியாரும் (ஸ்ரீமதி கார்த்தியாயினி அம்மாள் பி. ஓ. பி. எல்.) இச்சஞ்சிகைகளின் ஆசிரியர்களாக இருந்து வெளியிடுவதுடன், சர்வோதய பிரசுரங்களுக்கான காரியாலய பொறுப்புகளையும் வகிக்கின்றனர். அவர்களுடைய வீடு அழகான ஓர் ஆசிரமம் போலுள்ளது. அங்குள்ள கனிமரங்கள், புஷ்பச்செடிகள் எல்லாவற்றையும் தமது மனைவியாரே வைத்துப் பயிரிட்டுள்ளதாகவும், உடல் நலமின்மையால் திருச்சூர் சென்றுள்ளதாயும் தெரிவித்தார். ஆசிரியர் ராமசாமி, அவரது மனைவியாரும் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து தியாகங்கள் பல செய்தவராம். இத்தியாகத் தம்பதிகளின் கதை ருசியானது. இந்திய விடுதலை சரித்திரத்தில் பதியத்தக்கதாகும்.

அவரிடம் சென்றதன் நோக்கம் தஞ்சை விவசாயிகள் பிரச்னையைப்பற்றி அறியவும் இதற்குத் தீர்வு காண சிரமதான இயக்கம் வழிகாட்டுமா என்பதையும், தானமான ஒரு கிராமத்தை

நேரில் கண்டு அதைப்
தெரிந்து கொள்ள
வேண்டுமென்பதே.
பற்றி ராமசாமி அவ
கேட்டதற்கு, மறு ந
காலையில் திருவாரூரிலே
விஷயமாக ஒரு சர்வ
ஆலோசனைக்கூட்டம்
பதாயும், குன்றக்குடி
ளார் உள்ளிட்டு பல
வர்கள் அங்கு வருவத
கூறி தாமும் அங்கு செ
தாயும் தம்முடன் வி
ஞல் வந்து பலவற்றை
நேரில் தெரிந்து கொ
லாமென்றும் சொன்
சம்பவம் நடந்த வெ
மணி கிராமத்துக்கும்
டுந்து நேரில் சென்று
லாமென்பதை அறி
டன், அவருடன் மறு
காலை ரயிலில் திருவா
கு புறப்பட்டேன்.
ரயில் மெதுவா
சென்றதென்ருலும் த
யிலிருந்து ஒன்றரை
நேரத்தில் திருவா
அடைந்தோம். செ
வழியெல்லாம் வய
வயல்கள், வயல்கள்.
கதிர்கள் தலைசாய்ந்து
வடைக்குத் தயாராகக்
துள்ளன. நல்ல விளை
செங்கற்பட்டு, ராம
புரம் முதலிய மாவ
களில் சாகுபடி இம்
மோசமாயினும், த
யில் விளைச்சல் மேலா
ளது. சோழநாடு
டைத்து என்பது பெ
வில்லை. ஸ்ரீ சுந்தரமூ
சுவாமிகளுக்கு அருள்
ததும், ஸ்ரீ தியாகராஜ
கள் பிறந்ததுமான அ
ணிய நகரின் மத்தி
ளது பெரிய சிவாலயம்
கோவி கு ஆயி
(ஒரு வேலி 6 ஏக்க
சற்றே அதிகம்) நெல்
களுண்டு. அவ்வூரில்
நிலக்கிழாராகவுள்ள

# ஆயிரக்கணக்கான ஏக்கர் நாசம்

### வடபகுதி விவசாயிகள் கவலை

உடுப்பிட்டி, ஞாயிறு

வடபகுதியில் பல ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் நாசமடைந்துள்ளன. இங்கு நிலவிவரும் கடும் வரட்சியே நெல் உற்பத்திபாதிப்புக்கு காரணமாகியுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் உணவு உற்பத்தி திட்டத்துக்கு இப்பாதிப்பு ஒரு தோல்வியெனக் கருதப்படுகிறது. இயற்கை வஞ்சித்தால் வடபகுதி விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதி, வடமராட்சிப்பகுதி வயல்களிலேயே நெற்பயிர்கள் படுநாசமடைந்துள்ளன. இவ் வயல்களில் நெற்பயிர்கள் சுமார் இரண்டு அடிக்கு மேல் வளராது புற்களைப் போன்று காய்ந்து கருகியுள்ளன.

ஒரு சில வயல்களிலேயே நெற்கதிர்கள் தென்படுகின்றன. இதனால் விவசாயிகள் கலக்கமும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

# 'கடமை, பொறுமைக்கு எடுத்துக்காட்டானவர்'

### ஒய்வுபெறும் துணை அதிபருக்கு பாராட்டு

அனலைதீவு, ஞாயிறு

''கடமை உணர்ச்சியும், குழந்தை உள்ளமும் உடையவராய் பொறுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்த துணை அதிபர் திரு. ச. கணபதிப்பிள்ளையின் பிரிவைச் சகித்துக் கொள்ள முடியாது. பாடசாலை நிர்வாகத்தைச் செவ்வனே நடாத்த உதவியவர் மட்டுமல்லாது கல்வி பயிற்றுவதிலும் 3 தலைமுறையில் இருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கற்பித்த புகழுக்கும் உரியவர்.''

இவ்வாறு அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் கடந்த 38 வருடங்களாக ஆசிரியப்பணி புரிந்து கடந்த 23ந்திகதி ஓய்வு பெற்ற திரு. ச. கணபதிப்பிள்ளை ஆசிரியரை பாராட்டும் முகமாக நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் கல்லூரி அதிபர் திரு. வே. விஸ்வலிங்கம் கூறினர்.

பாடசாலை ஆசிரிய மாணவர்களால் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், பொறுமைக்கு இலக்கணமாய் இருந்து அன்பாகவும் பண்பாகவும், பாடசாலை நிர்வாகத்திற்கு உதவிய ஆசிரியர்களையும் உதவுமாறு செய்த பெருமை திரு. ச. கணபதிப்பிள்ளை ஆசிரியரையே சாரும் என்றும் அவரைப்போன்ற துணை அதிபரை நாம் இழப்பதில் கவலையடைகிறோம் என்றும் கூறினர்.

திரு. க. இளையதம்பி ஆசிரியர் பேசுகையில், கள்ளம் கபடமில்லாத பொறுமையான ஆசிரியர் ஒருவரை எமது கல்லூரி இழப்பது வருந்தத் தக்கது என்றார். மற்றும் திரு. ஆ. க. செல்லத்துரை ஆசிரியரும் சிரேஷ்ட வகுப்பு மாணவர்கள் சார்பில் செல்வன்கள் ஆ. கோபாலகிருஷ்ணன், அ. பிரகஷ்பதி, செல்விகள் க. லலிதாம்பாள், வசந்தா தேவி ஆகியோரும் அன்னாரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

ஆசிரியர் திரு. க. சிவனடியான் ஆசிரிய, மாணவர்கள் சார்பில் வாழ்த்துப்பா வாசித்தளித்தார். மதிய போசன விருந்தும் நடைபெற்றது.

# அரிசி[...]
# ஏற்றுமதி[...]
### தெகியோவித்த[...]

தெகியோவித்த,
''அண்மையில் வெ
களுக்குச் சென்றிருந்த
தமர் திரு. டட்லி
நாயக்கா அந்நாடுகள்
பத்தக்கவகையில்,
விரைவில் இலங்கை த
சியைப் பிறநாடுக
ஏற்றுமதி செய்யு
தெரிவித்துவிட்டு வ
ளார். இதனால் சில பே
திய நாடுகள் இல
யோடு இது சம்பந்
ஒப்பந்தம் கைச்சா
ஆவலோடு காத்துக் கொ
டிருக்கின்றன. ஆனல்
தமர் எவ்வாறு அரிசி
மதி செய்யப்போகிருர்
பது அவருக்குமட்
தெரியும்'' இவ்வாறு
யோவித்த எம். பி.
தனபால வீரசேகர
தொகுதியில் நடை
கூட்டமொன்றில் பே
யில் தெரிவித்தார்.
அடுத்த சில ஆண்டு
நாடு உணவில் தன்னி
பெறும் எனப் பிர
கூறிக் கொண்டிருந்த
அரசாங்கத்தின் கொ
கள்விவசாயிகளுக்கு ந
பயக்கத் தக்கவ
அமையும்வரை இது
தியமாகாது எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...மாண்ட

# ...ராமத்தின் ...ணம் என்ன?

...துைதப்பற்றி ...ாள்ளவும் ...தே. இது ...அவர்களை ...மறுநாள் ...ரூரிலே இவ் ...சர்வகட்சி ...டம் நடப் ...க்குடி அடிக ...பல தலை ...வருவதாயும் ...ங்கு செல்வ ...ன் விரும்பி ...லவற்றையும் ...கொள்ள ...சொன்னுர். ...ந்த வெண் ...க்கும் அங்கி ...சன்று காண ...அறிந்தது ...ன் மறுநாட் ...திருவாரூருக் ...டன். ...துவா...வே ...லும் தஞ்சை ...றரை மணி ...திருவாரூரை ...செல்லும் ...வயல்கள், ...பல்கள். நெற் ...சாய்ந்து அறு ...பாராகக் காத் ...ல விளைச்சல். ..., ராமநாத ...மாவட்டங் ...டி இம்முறை ...ம், தஞ்சை ...மேலாக உள் ...நாடு சோறு ...பது பொய்க்க ...சுந்தரமூர்த்தி ...அருள் செய் ...கராஜசுவாமி ...மான அப்புண் ...மத்தியிலுள் ...வாலயம். அக் ...ஆயி...வேலி ...6 ஏக்கருக்குச் ...ம்) நெல்வயல் ...வ்வூரில் பெரு ...கவுள்ள திரு.

தியாகராஜ முதலியாருக்கும் ஆயிரம்வேலி நிலமுண்டாம். அவர் சிறு நூறு ஏக்கர் நிலங்களை பூமிதானமாகக் கொடுத்திருப்பதாகவும் அறிந்தேன். தமது நிலத்தில் பெரும்பகுதியில்கரும்பு சாகுபடி செய்துள்ளதாகவும் கோவில் நிலங்கள் அவர் பொறுப்பில் நெல் சாகுபடி செய்யப்படுவதாகவும் தெரிகிறது. நெல் சாகுபடி செய்யும் நிலங்களுக்குத்தான் அறுவடைக் கூலி முதலிய பலபல பிரச்னைகள். கரும்பு சாகுபடியில் இத்தொல்லைகள் இல்லாததுடன் வருமானமும் அதிகமாம். தஞ்சையிலே நெல் சாகுபடி விஷயமாக பலபுதிய பிரச்னைகள் ஏற்பட்டிருப்பதால், மிராசுதார்களில் பலர் இனி நெல்லுக்குப் பதில் அதே நிலத்தில் கரும்பை உற்பத்தி செய்யவும் தங்கள் சொந்த தேவைக்கான நெல்லை மட்டும் சாகுபடி செய்யவும் உத்தேசித்துள்ளதாக அறிந்தேன். அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு அதிக நெல் தேவையிருக்க, அந்நிலங்களில் கரும்பு உற்பத்தி செய்வதை அரசாங்கம் அனுமதிக்குமா என்பது இனித் தெரிய வேண்டும். திருவாரூரில் பெரிய அரிசி ஆலையையும் சீனி ஆலையையும் உலகத் தமிழ்விழாக் காரியதரிசிகளுள் ஒருவரான திரு. தியாகராஜ முதலியார் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. நாட்டில் அதிக சீனியை உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக அந்நியச் செலாவணியைப்பெற வேண்டுமென்பது இந்திய அரசாங்கத்தின் கொள்கை என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

# ...சியை எவ்வாறு ...மதி செய்வது?

## ...வித்த எம். பி. கேட்கிறார்

...வித்த, ஞாயிறு ...யில் வெளிநாடு ...ன்றிருந்த பிர ...டட்லி சென ...ந்நாடுகள் நம் ...கயில், வெகு ...லங்கை தனதுரி ...பிறநாடுகளுக்கு ...செய்யுமெனத் ...ிட்டு வந்துள் ...ல் சில மேற்கத் ...ள் இலங்கை ...சம்பந்தமாக ...கைச்சாத்திட ...காத்துக் கொண் ...ன. ஆனால் பிர ...ாறு அரிசி ஏற்று ...ப்போகிறார் என் ...வருக்குமட்டுமே ...இவ்வாறு தெகி ...எம். பி. திரு. ...ரசேகர தனது ...ல் நடைபெற்ற ...ன்றில் பேசுகை ...வித்தார். ...ல ஆண்டுகளில் ...வில் தன்னிறைவு ...எனப் பிரதமர் ...ாண்டிருந்தாலும் ...தின் கொள்கை ...பிகளுக்கு நன்மை ...தக்கவகையில் ...ரை இது சாத் ...எனவும் நாட்...

டுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய இயலாத வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கம் நிலங்களை வழங்கியுள்ளதெனவும் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

தனது தொகுதியில் உள்ள பலர் நிலமற்றவர்களாக உள்ளார்கள் எனவும் அரசாங்கம் அவர்களுக்கு உணவுப்பயிர்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலங்களை வழங்க முன்வரவில்லையெனவும் திரு. தனபால வீரசேகர கூறினர். தேவையான நன்மைகள் அடையப்படாததால் கிராமங்களுக்கு அதிக பணத்தைச் செலவு செய்தல் வீணனது எனவும் கிராம மக்கள் தங்கள் கிராமங்களைச் சிரமதான இயக்கங்களின் மூலம் சீர்திருத்திக் கொள்ளலாம் எனவும்தெரிவித்தார்தேசிய அரசாங்கத்தின் சீரற்ற கொள்கைகளால் தான் நாட்டின் பொருளாதாரம் தளர்ச்சியுற்றதாகவும் திரு. வீரசேகர குறிப்பிட்டார்.

## ஆண்டு விழா

புத்தூர், ஞாயிறு

நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 8-வது ஆண்டுவிழா நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலைக்கு அருகிலுள்ள மைதானத்தில் நாவலர் அரங்கில் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மங்கல விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தார் கடந்த காலங்களில் கழகம்ஆற்றிய சேவைகளை கழகத்தலைவர் திரு க. சொக்கலிங்கம் தமது உரையில் விளக்கிக் கூறினர். நாவலர் பற்றிய இசைச்சித்திரம், மற்றும் இன்னிசைக் கச்சேரி, நாடகம் முதலியன விழாவில் இடம் பெற்றன. குழந்தைகள் பஜனைமூலம் ரூபா 3000 கழகத்திற்கு வழங்கப்பட்டமைக்கு விழாவில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை ஸ்ரீபன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் பஜனைசபையார் பஜனை ஆரம்பிக்கப்பட்ட மூன்றுவது வருட பூர்த்தியைப் பொங்கல்தினத்தன்று சிறப்பாகக் கொண்டாடினர். இதனைமுன்னிட்டுநால்வரின் திரு உருவப்படம் சாந்தையர் மடம் பிள்ளையார் கோவிலிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. இந்த பஜனைச்சபையாருக்கு வண்ணைசைவ இளைஞர் மன்றம் என்று பெயரிடப்பட்டுள்ளது. வண்ணை கோதண்டபாணி குழுவினருடைய இசைக்கச்சேரியும் அன்று நடைபெற்றது.

## ச. ச. நிலைய கடமைகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

தேசிய அரசாங்கம் பொது மக்களின் நலனில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டம், விவசாயப்படை போன்ற இயக்கங்கள் பாராட்டத் தகுந்த முயற்சிகளாகும். இத் தருணத்தில் சனசமூக நிலையங்களின் கடமைகள் மகத்தானது. இவ்வித இயக்கங்களுக்குச் சனசமூக நிலையங்கள் ஆதரவு கொடுத்து ஒத்துழைக்க வேண்டும்.''

இவ்வாறு பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய 10-வது ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. வே. தம்பிராசா தமது உரையில் கூறினர். மற்றும் திருவாளர்கள் பொ. கணபதிப்பிள்ளை, கே. பாலசிங்கம், எஸ். சிவநேசன், ஆ, செல்லத்தம்பி, சி. சந்திரசேகரன் உட்பட வேறு சிலரும் பேசினர்.

புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:- தலைவர் திரு. வே. தம்பிராசா, உபதலைவர் திரு. மு. பரராசசிங்கம், காரியதரிசி-திரு இ. சிவஞானம். உபகாரியதரிசி-திரு. க. பீதாம்பரம், தனுதிகாரி- திரு. கா. வேலும்மயிலும், உபதனுதிகாரி-திரு. மா. சிவனருள், கணக்குப் பரிசோதகர்-திரு. ஆ. கிருஷ்ணபிள்ளை, உப கணக்குப் பரிசோதகர்-திரு. ம. குருசாமி.

# 'நாவலருக்கு நன்றி சொல்லதாமதித்துவிட்டோம்

உடுப்பிட்டி, ஞாயிறு

'நாவலர் ஈழத்திற்கு மட்டுமல்லாது தமிழ் நாட்டிற்கும் அரிய பணிகள் செய்துள்ளார். இதனுல் நாம் இன்று பெருமைப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். ஆனுல் நாவலரின் பணிக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கும் பல வருடங்கள் தாமதித்து விட்டோம், நாவலர் சைவ மதத்திற்கும்தமிழுலகுக்கும் ஆற்றியதொண்டுகள் பிற மதத்தினராலும் போற்றப்படுகின்றன. நாம் ஆறுமுகநாவலரின் இலட்சியத்தை எமது உயிராகப் போற்றி வாழவேண்டும். நாவலருக்கு சிலையமைக்க வேண்டியது தமிழினத்தின் கடமையாகும். இம்முயற்சி ஈடேற அனைவரும் ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும்'

இவ்வாறு உடுப்பிட்டி நாவலர் படிப்பகத்தின் நாவலர் நினைவுதினக் கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு தா. குண்டுமணி பேசுகையில் கூறினர்.

மற்றும் திரு.நா .நடேசன் திரு. சி. தில்லைநடேசன் உட்பட வேறுபலரும் பேசினர்.

# பொலிஸ் சார்ஜன்டை தாக்கியதாகப் புகார்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து நேற்று பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரைச் சிலர் தாக்கினராம்.

இம்மாதம் தொடக்கம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து கொழும்புக்கு இடமாற்றம்பெற்றுச் சென்ற இந்த சார்ஜண்ட் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு வழக்கொன்றிற்குச் சாட்சியமளிப்பதற்கு வந்துவிட்டு கொழும்புக்கு திரும்பிச் செல்வதற்கு பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பஸ்ஸைக் காத்திருந்த சமயம் சிலர் கூட்டமாக அவரருகில் வந்து அவரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த கைப்பையையும் வழக்குசம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் பறித்துக்கொண்டு ஓட்டம் பிடித்ததாகவும் தாக்கப்பட்டவர் அடிதாங்க முடியாமல் பக்கத்திலிருந்த விற்பனவு நிலையமொன்றில் புகுந்து தஞ்சமடைந்ததாகவும் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிசில்புகார் செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபரை பொலிசார் தேடுகின்றனர்.

# பால் உணவு இறக்குமதி விரைவில் நிறுத்தப்படும்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

""பால்மா வகைகள், தகரப்பால் ஆகியவற்றின் இறக்குமதியை வெகு விரைவில் அரசாங்கம் முற்றாகத் தடைசெய்யும். நாட்டின் தேவைக்கான பொருட்களைத் தேசிய பால்சபை தயாரித்ததும் இத்தடை விதிக்கப்படும் என உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா ஹெடவலவெலயுலாவில் உள்ள தேசிய பால்சபையின் பால் சேகரிக்கும் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

நாடு பூராவும் தேவையான கட்டிப்பாலையும், பால் மாவையும் வழங்குதலே தேசிய பால் சபையின் நோக்கம் எனவும் இப்பொருட்களில் சுயதேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் பாற்பண்ணைகளைச் சொந்தத்தில் நடத்தாது தனிப்பட்ட சிறு மாட்டுப் பண்ணைகளை நடத்துபவர்களிடமிருந்து தரமான பாலைப் பெற்றுக்கொள்ளுமெனவும் அமைச்சர் மேலும் எடுத்துக் கூறினர்.

இந்த பால் சேகரிப்பு நிலையம் இப்பகுதி மக்களிடையே பாற்பண்ணைத் தொழில் வளர்ச்சியுற பேருதவியளிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கியப் பிரச்னை எனத் தெரிவித்த அமைச்சர் செங்கடகலை, ஹேவாகெட்ட ஆகிய தொகுதிகளிலுள்ள இளைஞர்கள் மாட்டுப் பண்ணைகளை ஆரம்பிக்க விரைவில் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுமெனவும் இது அவர்களுக்கு வேலைவாய்ப்பளித்து வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைத் தீர்க்க உதவுமெனவும் கூறினர் —

## புதிய அதிகாரி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

டாக்டர் திரு. எஸ். திருலோகநாதன் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைவைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## விருந்துபசாரம்

கோப்பாய், ஞாயிறு

இப்பகுதி கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. எஸ். செல்லையா அரசாங்க நிதிஉதவியுடன் கல்விபெற எகிப்து செல்வதையொட்டி அவருக்கு கோப்பாய் வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தாரால் திரு. கே. ஆர். குமாரசாமி தலைமையில் தேநீர் விருந்துபசாரமளிக்கப்பட்டது.

## பருத்தித்துறையில் குறவர் தொல்லை

பருத்தித்துறை, ஞாயிறு

கூடைகள் பின்னும் போர்வையில் இப்பகுதியில் நடமாடும் குறவர், வீடுகளிலுள்ள கோழிகளையும் களவாடிவிடுகிறார்களாம். இரவு நேரங்களில் இவர்கள் கடற்கரைப்பகுதிகளில் தங்குகிறார்கள். இக்கூட்டத்தவரைபொதுவிடங்களிலிருந்து பருத்தித்துறை சொலிசார் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றனர். —

## நாட்டிலும் நகரிலும்

பலவருடங்களுக்குப்பிறகு நேற்று ஒரு குடுகுடுப்பைக்காரரைக்கண்டேன். இந்த வர்க்கம் இலங்கையில் அழிந்துபோய் விட்டதோ என்று சந்தேகப்பட்ட எனக்கு அவரைக்கண்டதும் பல காலம் சந்திக்காமல் இருந்த ஒரு சிநேகிதனைக் கண்டதுபோல ஆச்சரியம் ஏற்பட்டது.

அதிகாலையிலேயே பட்டணத்தில் அவர் வசிக்கும் வாடகை அறையிலிருந்து புறப்பட்டு அங்கிருந்து வெளிக்கிடும் முதலாவது பஸ்ஸில் நாட்டுப்புறத்துக்கு வந்துவிட்டார். அவரும் இன்னெரு கூட்டாளியும் பெரும்பாலும் ஜோடியாகத் தான் பிழைப்புக்கு வருவார்கள்.

நான் அவரைக் கண்ட போது அவர் பஸ்ஸை விட்டு இறங்கி ஓர்ஒதுக்கான முடுக்கில் வேஷம் போட்டுக் கொண்டிருந்தார். கக்கத்தில் தொங்கும் ஒரு துணிப்பையில் பட்டுத்துண்டுகள், சந்தனம், குங்குமம் சிறுகண்ணடி, குடுகுடுப்பை முதலிய வேஷ சமான்கள் இருந்தன. வேஷம் போட்டு முடிந்ததும் மத்தியானம் இன்ன இடத்தில் சந்திப்பதென்று தீர்மானித்துக்கொண்டு இருவரும் திக்கு திக்காக கிராமத்துக்குள் நுழைந்தனர்.

'நல்லகாலம் வருகுது, நல்ல காலம் வருகுது கிர்ர்ர்டக்! ஒரு குடிசையின் படலையை திறந்துகொண்டு ஒருவர் உள்ளே சென்றார். உடனே இரண்டுநாய்கள் அவரை சூழ்ந்துகொண்டு பலத்த ஆட்சேபம் கிளப்பின. அவர் அதுகளை தூசி என்றும் மதிக்கவில்லை. பயந்து பின்வாங்கினல்தான் நாய் துரத்திக்கொண்டு வந்து வாய்வைக்கப்பார்க்கும் என்ற சித்தாந்தத்தை அவர் அனுபவ ரீதியாக அறிந்திருக்கிறார்.

வீட்டில் ஒரு வயதான பெண்ணும்ஒருபருவமங்கையும் இருந்தனர். குடுகுடுப்பைக்காரரர் அவர்களை ஏற இறங்கப்பார்த்து அவர்களுடைய முகக்குறிப்புகளை அளந்துகொண்டார். வீடு இருக்கும் நிலைபரத்தையும் ஜாடையாகக் கவனித்துக் கொண்டார். 'கிர்ர்ர்டக், இந்த சின்ன அம்மாளின் மனத்திலிருக்கும் வேதனை இன்னும் சிலநாட்களில் மறையப்போகிறது. வருகிற சித்திரை மாதத்து பௌர்ணமிக்கிடையில் தென்கிழக்கு திசையிலிருந்து வரப்போகிறன்' இந்த வீட்டுக்குரியவன்' என்றார். அவ்வளவுதான். மங்கைக்கு இன்னும் விவாகம்ஆகவில்லையென்பதையும் பெரிய பெண் அவளுடைய தாய் என்பதையும் கிரகிப்பது அவருக்கு சிறிய விஷயம். பெரியவள் உட்கார்ந்து கேட்க ஆரம்பித்துவிட்டாள்.

வாழ்க்கையில் எந்த அந்தஸ்தில் இருந்தாலும் எல்லோருக்கும் மனித சுபாவம் ஒன்றுதான். நடந்துபோன காலத்தைப்பற்றி ஏங்குவார்கள். இப்பொழுது நடக்கும் காலத்தில் திருப்தி அடையமாட்டார்கள். இனிவரும் காலம் நன்றாயிருக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்பார்கள். இந்த எளிய தத்துவத்தை அறிந்துகொள்வதற்கு மனோதத்துவ நூல்களை படிக்கவேண்டியதில்லை. மனிதவாழ்க்கையை ஊன்றி கவனித்தால்இதுசுலபமாகப் புரிந்துவிடும். மனிதனுடைய இந்தப்பலவீனத்தை நன்கறிந்தவர்கள் ஆருடம் பார்ப்பவர்கள். 'நல்லாயிருந்து இப்பொழுது நொந்துபோனாய். இனிமேல் நல்லாயிருப்பாய்.

(10-கலம் பார்க்க)

(11-ம் கலத் தொடர்ச்சி)

இந்த அடிப்படையில்தான் அவர்கள் குறிகூறுவார்கள். மொட்டையாக இப்படி கூறி விட்டால் காரியம் பலிக்காது. அதற்கு அலங்காரமாக இரண்டொரு பாட்டுகள், திருஷ்டாந்தமாக சிறு கதைகள் புரியாத சமஸ்கிருத சொற் பிரயோகங்கள் இவற்றுடன் வாய்ச்சாதுரியமான வார்த்தைகளையும் அவிழ்த்து விட்டால் தீராத அவநம்பிக்கைபடைத்தவர்களும் ஜோஸ்யம் கேட்பார்கள்.

இந்த தந்திரங்கள் யாவற்றையும் மிக லாவகமாகக் கையாண்டு தமது அன்றைய பிழைப்பை முடித்துக்கொண்டு மத்தியானம் இரண்டு மணிக்கு நமது குடுகுடுப்பைக்காரரர் மீண்டும் பட்டணத்துக்கு பஸ் ஏறினார்,

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் பேரவை உருவாகும்

பேராதனை, ஞாயிறு

இந்துமாணவர்சமூக நலன் கருதி இலங்கைப்பல்கலைக் கழக (பேராதனை) இந்து மாணவர் சங்கத்தினர் அகில இலங்கை இந்துமாணவர் பேரவை யொன்றை விரைவில் உருவாக்க விருக்கின்றனர். இப்பேரவையின் அங்குரார்ப் பணக் கூட்டம் வரும் 31-ம் திகதி காலை 9மணியளவில் பல்கலைக்கழக முருகன் கோவிலில் நடைபெறவிருக்கிறது.

பல்கலைக்கழகங்கள், சட்டக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் கல்லூரிகள் ஆகிய எல்லாக் கல்வி நிலையங்களிலுமுள்ள மாணவர்களைக் கொண்டதாக இப்பேரவை அமையவிருக்கிறது.

சமயக் கல்வியையும், சமயப் பண்பையும் பரப்புதல் வளர்த்தல், இந்துசமயத்தின் உரிமைகளைப்பாதுகாத்தல், அருமை பெருமை வாய்ந்த தமிழ் நூல்களையும், சமய நூல்களையும் அச்சிடுதல், இந்துகலாசார நூல்களையும் எழுதியும் மொழி பெயர்த்தும் வெளியிடுதல், இந்து சமய அபிவிருத்திச் சங்கங்களுடன் இணைந்து இந்து தர்மத்தையும் இந்து கலாசாரத்தையும் வளர்த்தல் இதன் நோக்கங்கள்.

இலங்கைப் பல்கலைக் கழக இந்துமாணவர் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் பே. கனகசபாதி, தலைவர் திரு. க. கிருஷ்ணனந்தசிவம் இணைச் செயலாளர்கள் திரு இ. இராஜலிங்கம், செல்வி ரஞ்சினி கனகரத்தினம் ஆகியோரும் மற்றும் சங்க உறுப்பினர்களும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அங்குரார்ப் பணக் கூட்டத்தின் போது இதில்கலந்து ஆலோசனை வழங்கி இதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்புத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பட்டினசபையில்

# சைவமத பிரதிநிதிகளுக்கு கிறிஸ்தவ பிரதிநிதி நன்றி

அளவெட்டி, ஞாயிறு

யாழ். மேற்றிராசனத்தின் துணை மேற்றிராணியாராக நியமனம் செய்யப்பட்டுள்ள வணக்கத்துக்குரிய லியோ இராசேந்திரம் அன்ரனிஅடிகளாருக்கு வாழ்த்து தெரிவிக்கும் தீர்மானமொன்றை சுன்னாகம் பட்டின சபை நிறைவேற்றியுள்ளது.

சுன்னாகம் பட்டின சபை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி சபை கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேறியது.

8-ம் வட்டார அங்கத்தவர் திரு. இ. இராசதுரை பிரேரிக்க, 4-ம் வட்டார அங்கத்தவர் டாக்டர் எ. நடராசா அனுமதித்த இத்தீர்மானத்தின் விபரம் வருமாறு:

துணைமேற்றிராணியாராக நியமனம்பெற்ற இராசேந்திரம் அன்ரனிதற்போதைய யாழ், மேற்றிராணியாராக உள்ள கே. எமிலியானுஸ் பிள்ளைபோல சாதிமத வேறுபாடின்றி முற்போக்கான திட்டங்களை அமுல்செய்வார் என எதிர்பார்க்கிறோம். அவர் துணைமேற்றிராணியாராக தெரிவுசெய்யப்பட்டதை பாராட்டுகிறோம்.

இத்தீர்மானம் துணைமேற்றிராணியாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஆதரித்து சுன்னாகம் சந்தை வட்டார அங்கத்தவர் பேசுகையில், இப்பிரேரணையைசைவ சமயப் பிரதிநிதிகள் கொண்டுவந்து நிறைவேற்றியது கத்தோலிக்க மக்கள் அனைவரும் சந்தோஷப்படக் கூடிய ஒரு விஷயமாகும் என்றார்.

## அறுவடை இல்லை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரப் பகுதியிலுள்ள வயல்களில் நெற்பயிர்கள் வாடியிருக்கின்றன. அநேக வயற்சொந்தக் காரர்கள் தமது வயல்களிலுள்ள நெற்பயிர்களையும் வாடிய வைக்கோலையும் செதுக்குகின்றனர். நெல்அறுவடை செய்யலாம் என எண்ணியவர்கள் போதிய மழை இல்லாததால் தான் நெற்பயிர்களைச் செதுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## 'இசெக்கி' செய்முறைக் காட்சிகள்

அராலி, ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு வியாபார நிறுவனம் விவசாய இயந்திரங்களை இறக்குமதி செய்துவருகிறது. சிறுவிவசாயிகளுக்காக ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் 'இசெக்கி' என்ற கை-உழவு இயந்திரத்தை இந்த நிறுவனம் இறக்குமதி செய்து அதன் இயக்குமுறைகளைப் பல பாகங்களிலுமுள்ள விவசாயிகளுக்கு அவ்வப்பகுதி கிருஷிகப்பகுதி உத்தியோகத்தரின் உதவியோடு காண்பித்து வருகிறது.

அவ்வித செய்முறைக் காட்சியொன்றை அராலி வடக்கு செட்டியாமடம் புகையிலைச் சங்கத்திற்குஅருகிலுள்ள வயலில் செய்து காட்டினார்கள். பல விவசாயிகள் இதைப் பார்வையிட்டனர். இந்த இயந்திரத்தில் உழவு கருவிகள், நீரிறைக்கும் கருவிகள், கிருமிநாசினிகள் தெளிபொறிகள், தூவுபொறிகள், பாரமேற்றிச்செல்லும் வண்டிகள் ஆகிய இணைப்புகளை மாட்டி இயக்க வசதிகள் உண்டு. எல்லா உபகரணங்களும்சேர்ந்த ஓர் இயந்திரம் பத்தாயிரம் ரூபா பெறுமதியுடையதாக மதிக்கப்படுகிறது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஏக்கரையுடைய விவசாயிக்கு இவ்வியந்திரம்பெரிதும் உபயோகமானதெனக் கருதப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் பேடன் பவல் தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண சாரணர் சங்கத்தினர்சாரணீயத்தின் தந்தையாகிய பேடன் பவல் பிரபு தினத்தை அடுத்த மாதம் 22-ம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக நடாத்தவிருக்கின்றனர்.

இவ்விழாவில் பல பிரமுகர்கள் பாரட்டுரை நிகழ்த்துவார்கள். சாரணச் சிறுவர்கள், சிறுமிகளினால் ஒரு கதம்ப நிகழ்ச்சியும் நடைபெறும். இவ் விழாவை யொட்டி ஒரு பேச்சுப் போட்டிநடைபெறுகிறது. யாழ் மாவட்டத்திலுள்ள எல்லாச் சாரணச் சிறுவர்களும் சிறுமிகளும்இதில்பங்கு பற்ற வாய்ப்புண்டு. இப்போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட விருக்கின்றன.

# தீவுப்பகுதி செய்திகள்

(ஊர்காவற்றுறை நிருபர்)

### அனலைதீவில் நெல் உச்சநிலை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

அனலைதீவில் நெல் விளைச்சல் உச்சநிலையை அடைந்துள்ளது. மழை இல்லாதிருந்தபோதிலும் இங்கு நெல் நன்றாக விளைந்துள்ளது.

தீவுப்பகுதியில் சரவணை புளியங்கூடல், வேலணை நாரந்தனை, ஆகிய கிராமங்களில் நெல் வெகுவாகப்பாதித்துவிட்டது. இதற்குமழையின்மையே காரணம் என விவசாயிகள் கவலைதெரிவித்தனர்.

0 0 0

### அதிக வெங்காயம் கொள்வனவு

சரவணை-வேலணை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இவ்வருடம் பெருந்தொகையான வெங்காயத்தைக் கொள்வனவு செய்கிறது. இவ்வெங்காயம் இக்கிராமப்பகுதிகளில் விளைவிக்கப் பட்டதாகும்.

0 0 0

### அமைச்சருக்கு அழைப்பு

யாழ் மாவட்டத்திற்கு வருகைதரும் ஸ்தலஸ்தாபன அமைச்சரை சரவணை கிராமத்திற்கும் வருகை தருமாறு கோரி சரவணை கிராமமுன்னேற்றச் சங்கம் தந்திமூலம் அமைச்சரைக் கேட்டுள்ளது.

சரவணை சனசமூக நிலையம் பாரதி சனசமூக நிலையம், காந்திஜீ இளைஞர்விவசாயக்கழகம் கி. மு, சங்கம் ஆகியன அமைச்சரை வரவேற்க ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளன.

0 0

### மீன் சந்தை

கரம்பன் கிராமத்தைச் சேர்ந்த மெலிஞ்சிமுனைவட்டாரத்தில் மீன் சந்தை அமைப்பதற்கு அரசாங்கம் ஓர் ஏக்கர் நிலம் கொடுத்துள்ளது.

இந் நிலத்தில் நாரந்தனைக் கிராமசபை மீன்சந்தையை கட்ட முயற்சி எடுத்து வருகிறது.

0 0 0

### காந்திநினைவுவிழா

அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் ஜனசமூக நிலையத்தினர் இம்மாதம் 30-ம் திகதி காந்திதினம் கொண்டாட விருக்கின்றனர்.

0 0

### 40 ஆயிரம் திருட்டு

வேலணை தெற்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை கார்த்திகேசு என்பவரின் வீட்டில் திருடர்கள் புகுந்து நாற்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட நகைகளை திருடிச் சென்றனர்,

இது சம்பந்தமாக அப்பகுதியிலுள்ள வாலிபத் திருட்டுக் கோஷ்டியொன்றை ஊர்காவற்றுறை பொலிசார் கைது செய்து மேற்படி நகைகளை மீட்டுள்ளனர். இப் பகுதியில் அண்மைக் காலங்களில் பலகூட்டுறவு கடைகள் உடைக்கப்பட்டும் வீடுகள் உடைக்கப்பட்டும் திருட்டுகள் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக்கட்சிக் கிளைக் கூட்டம்

தெல்லிப்பழை, ஞாயிறு

தமிழரசுக்கட்சி தெல்லிப்பழைக் கிளைக் கூட்டமும் வாலிபமுன்னணியின் கூட்டமும் இம்மாதம் 30-ந் திகதி தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

# கிராமத்தின் பொருளாதாரத்துக்கு கூட்டுறவுச்சங்கத்தின் சேவை

## விளக்குகிறார் உபசபாநாயகர்

அளவெட்டி, ஞாயிறு

''தென்கிழக்காசியாவிலே கூட்டுறவு இயக்கத்தில் இலங்கை முக்கிய இடம் வகிப்பது போல் யாழ் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையில் அளவெட்டி முக்கிய இடம் வகிக்கிறது. ஒரு கிராமத்தின் சமூக பொருளாதார விவசாய அபிவிருத்திக்கு கூட்டுறவு சங்கங்களால் தான் அரிய சேவை செய்ய முடியும் என்ற உண்மையை அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயலில் காட்டியதே. இன்றுவெள்ளி விழா எடுக்க ஏதுவாகியுள்ளது. இச்சங்கத்தின் சேவை பாராட்டுக் குரியது''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. யும் உப சபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்க 25-வது ஆண்டு வெள்ளி விழாவின் 3-வது நாள் விழாவில் கலந்து உரையாற்றுகையில் கூறினார்.

அளவெட்டி முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் வைத்திய கலாநிதி திரு. இ. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அன்று மேற்கத்திய நாடுகளில் தனிப்பட்ட முதலாளிகளால் தொழில் நிறுவனங்கள் நிறுவப்பட்டு அவர்களின் சுபீட்சத்துக்காகவே அவை தொடர்ந்து இயங்கி வருகின்றன. இன்று ஒவ்வொரு மக்களும் சுபீட்சமடையவே தொழில் நிறுவனங்களை கூட்டுறவு இயக்கங்களாக மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு இயக்கத்தில் சேவை செய்ய முன் வருபவர்கள் நேர்மை, கடமை, சேவை என்பன உடையவராக இருந்தால்தான் சங்கங்கள் அபிவிருத்தி அடைவதோடு அப்பகுதி மக்களும் பயனடைய ஏதுவாகும். கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டில் சிறந்த முறையில் இயங்கி வருவதால் நாடு அபிவிருத்தியடைய தனிப்பட்டவர்களுக்கு வழங்கும் சலுகைகளை கூட்டுறவு இயக்கத்துக்கே வழங்கவேண்டும்.

அரசாங்க உத்தியோகம் முக்கியம் என்று நம்பி வாழ்ந்த நாம் இன்று அரசாங்க உத்தியோகத்திலும் பார்க்க விவசாயமே சிறந்தது என்ற நிலைமை மாறியுள்ளது. விவசாயம் மென்மேலும் அபிவிருத்திஅடைய பிறநாடுகளை போல் நவீன முறையை நாம் கையாளவேண்டும்.

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

''நான் இப்பகுதியில் காரியாதிகாரியாக கடமையாற்றுகையில் சிறிய சங்கமாக இயங்கி வந்த இக் கூட்டுறவுச் சங்கம் இன்று வளர்ச்சி பெற்று அளவெட்டியின் ஒளி விளக்காக விளங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு, இக்கிராம சிறார்களின் நல்வாழ்வுக்காக தொண்டாற்றி அடுத்து பொன் விழா கொண்டாட வேண்டும் என விரும்புகிறேன்.''

இச் சங்கத்தின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் பாராட்டிய திரு. முருகேசம்பிள்ளை தற்போதைய தலைவர் திரு. பொன்னம்பலத்துக்கு ''தொண்டர் பொன்னம்பலம்'' என்ற பட்டத்தைச் சூட்டினார்.

செனட்டர் சு. நடராசா பேசுகையில் கூறியதாவது:

தமிழர் சமுதாயத்தில் கூட்டுறவு பழமையானது. இக் கூட்டுறவால் மக்களுக்கு பலதரப்பட்ட சேவை செய்யவே இப் பகுதியில் கூட்டுறவு இயக்கங்கள் இயங்கி வருகின்றன. அதில் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்திய சாலையும் இன்று வளர்ச்சி அடைந்துள்ளது கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி அடைய அரசியல் கலப்பற்ற சேவை வேண்டும்.

மாவட்ட கமத்தொழில் அதிகாரி திரு. எஸ். சிவகுரு, ஆசிரியர் செ. கதிரேசர் பிள்ளை ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர்.

சிறுவர் சிறுமியரின் கூட்டுறவு பற்றிய சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

லயஞானகுபேர பூபதி வி. தெட்சணாமூர்த்தி குழுவினரின் மேளவார்த்திய கச்சேரியும், எம். பி. பாலகிருஷ்ணனின் இன்னிசைக் கச்சேரியும் ''முறிச்சுக் கட்டி முருகேசு' ''ஏழை அழுதண்ணீர்'' என்ற நாடகங்களும் இடம் பெற்றன. வை. செல்லையா நன்றி கூறினார்.

# இன்றைய பலன்

திங்கட்கிழமை

(27-1-69)

தை மாதம், 14 உ

திதி- நவமி, காலை 8-16 மேல் தசமி.

நட்சத்திரம்- கார்த்திகை 12-49 மேல் ரோகினி.

ராகுகாலம்- 8-06 — 9-36.

சுபநேரம்- 12-36 — 2-06.

இன்று பிறந்தவர்களுக்கு- தொழிலில் தொல்லை உயர்வில் தாமதம். கல்விபயிலுவோர் கவனம்வேண்டும். கன்னியர் வாழ்வில் ஏமாற்றம்தொற்றுநோய் தொடரும் சுகாதாரம் வேண்டும். எண்ணிய கருமம் கைகூடும். மனை இயற்றுவோருக்கு தனம் சேரும் நல்லாண்டாகும்.

மேஷம்- ஆயுத பயம், அவசரம் வேண்டாம்.

ரிஷபம்- மந்தநிலை, மறதிக்குணம் உண்டு.

மிதுனம்-வாக்குச்சித்தி, வரவும் உண்டு.

கடகம்- சகோதர சஞ்சலம், பிரிவுத்துயர்.

சிம்மம்- சுற்றம் வாழ்த்தும் துரிதப் போக்கு.

கன்னி- இதயக் களிப்பு, இணைப்பு இறுக்கம்.

துலாம்- ஆசாரக் குறைவு, அவசர கோலம்.

விருச்சிகம்- உறவாடும் உள்ளங்கள், ஒன்றாகும் இன்று.

தனுசு- நினைவில் நிழலாட்டம்' நெஞ்சில் போராட்டம்.

மகரம்-தாராளசிந்தை, தனமும் சேரும்.

கும்பம்- தொழில் சிறப்பு, தொல்லைகள் விலகும்.

மீனம்- நிமிர்ந்து நட, நிலையான வரவு.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அல்வாய் கோஷ்டி வதிரியை தோற்கடித்தது

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சிக்காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தனினுல் நடாத்தப்பட்டுவரும் உடுப்பிட்டி தொகுதிக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை இறுதித் தெரிவுப் போட்டியில் வதிரி டயமன்ட்ஸ் 'ஏ' பிரிவுக் கோஷ்டியினருக்கும், அல்வாய் மனோகரா 'ஏ' பிரிவுக்கோஷ்டியினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

இம்மோதலில் இருகோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். வதிரிக் கோஷ்டியினரின் முன்னணி வீரர்களின் பலத்த தாக்குதல்கள் எல்லாவற்றையும் அல்வாய்க்கோஷ்டி கோல் காப்பு வீரரான என். ஜெயரத்தினம் சாதுரியமான முறையில் முறியடித்து ரசிகர்களின் பாராட்டுதல்களை பெற்றுக்கொண்டார்.

இடைவேளை வரை ஒரு கோஷ்டியும் ஒருகோலும் போடவில்லை. இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் தொடங்கி மூன்று நிமிடத்தில் அல்வாய் மனோகரா வலதுகரை முன்னணி வீரரான க. மங்களேஸ்வரன் அடித்தபந்தை நடுத்தர வீரரான எஸ். வீரராசா மிகவும் லாவகமான முறையில் தனது தலையினல் இடித்து கோல் வலைக்குள் தள்ளினர். இதன் பின்னர் இருதரப்பினரும் மிகவும் உற்சாகமாக விளையாடினர்.

ஆட்டமுடிவில் அல்வாய் மனோகரா வதிரி டயமண்ட் கோஷ்டியை 1—0 கோலால் வெற்றியீட்டியது. திரு. எஸ். நித்தியானந்தம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

சென்றவருடம் வடமராட்சிக்காரியாதிகாரியினுல் நடாத்தப்பட்ட உடுப்பிட்டி தொகுதிக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் சாம்பியனுகத் திகழ்ந்த வதிரி டயமண்ட்ஸ் கோஷ்டி இவ்வருடம் அல்வாய் மனோகராவிடம் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## மண்டைதீவு வென்றது

அல்லைப்பிட்டி, ஞாயிறு

அல்லைப்பிட்டி சென். பிலிப் விளையாட்டுக்கழகத்திற்கும் மண்டைதீவு வான்மதி விளையாட்டுக்கழகத்திற்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மண்டைதீவுக் கோஷ்டி ஒரு கோலால் அல்லைப்பிட்டியை வென்றது. மண்டைதீவு ஈச்சந்தரவை விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## வசாவிளான் வென்றது

அளவெட்டி, ஞாயிறு

வசாவிளான் இளைஞர் விளையாட்டுக்கழகம் காங்கேசன்துறை பொலிஸ் கழகத்துடன் மோதிய ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் வசாவிளான் 3-0 கோலால் வெற்றிபெற்றது. இப்போட்டி வசாவிளானில் நடைபெற்றது.

## உதயதாரகை வென்றது

அளவெட்டி, ஞாயிறு

தெல்லிப்பழை சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் குடும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகமும், கட்டுவன் பாலர் ஞானோதயா விளையாட்டுக் கழகமும் மோதியதில் குடும்பசிட்டி உதயதாரகை85ஓட்டங்களால் எதிர்க்கோஷ்டியை வென்றது. கட்டுவன் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## வித்தியாதிபதிக்கு கோரிக்கை

அராலி, ஞாயிறு

அராலி சரஸ்வதி வித்தியாசாலை சென்ற ஆண்டிலிருந்து மகாவித்தியாலயமாக இயங்கி வருகிறது. இப்பாடசாலையில் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே ஆசிரியர்களாக விடுக்கிருர்கள். இதனுல் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளைப் பட்டதாரிகள் கற்பிக்கும் வெளியூர் பாடசாலைகளுக்கு அனுப்பியுள்ளனர்.

இக்குறையை நீக்க அராலி மக்கள் பலர் பட்டதாரிகளை இவ் வித்தியாலயத்தில் நியமிக்குமாறு கோரி மகஜர் வித்தியாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

விரைவில் ஓய்வு பெறும் அதிபரின் இடத்துக்கும் ஒரு பட்டதாரியை நியமிக்குமாறும் அந்த மகஜரில் கோரியுள்ளனர்.

## பாங்கொக் செல்லும் விளையாட்டு வீரர்

பருத்தித்துறை, ஞாயிறு

மிக அண்மையில் இலங்கை உதைபந்தாட்ட முன்னணி வீரராக பாங்கொக் செல்லவிருக்கும் திரு கே. ஸ்ரீதரனுக்கு, நெல்லியடி ஸ்பேஸ் கழகம் ஒரு பிரிவுபசாரம் நடாத்தவிருக்கிறது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவனுன இவர் பாங்கொக்கில் ஒரு மாதகாலம் தங்குவாரெனத் தெரிகிறது.

## வெற்றிபெற்ற கோஷ்டிகள்

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிக் காரியாதிகாரியால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அல்வாய்மனோகரா, வதிரி டைமன் கோஷ்டியை 1—0 கோலால்தோற்கடித்தது. திரு. எம். இராமக்கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

இதே சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி யூனியனும், சுடரொளியும் விட்டுக் கொடுத்ததன் காரணமாகமுறையே நெல்லியடி ஸ்பேஸ் கோஷ்டியும் கொற்ருவத்தை பாலஜோதி கோஷ்டியும் வெற்றி பெற்ற கோஷ்டிகளாகக் கணிக்கப்பட்டன.

## ரூ. 25,000 ஒதுக்கீடு

அராலி, ஞாயிறு

அராலி சரஸ்வதி வித்தியாலயத்தின் கட்டடத்தை விஸ்தரிப்பதற்குக் கல்வி இலாகா ரூபா 25,000 இவ்வாண்டில் ஒதுக்கியுள்ளது. வித்தியாலய பெற்ருேர் ஆசிரிய சங்கம் கட்டட வேலையைப் பொறுப்பேற்றுள்ளது.

## காணிக்கை மாதா திருநாள்

காங்கேசன்துறை, ஞாயிறு

மயிலிட்டி காணிக்கை மாதா கோவில் கொடியேற்றம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. அடுத்த மாதம் 2-ந் திகதி நடைபெறும் பெருநாள் மிக ஆடம்பரமான முறையில் கொண்டாடப்படவிருக்கிறது. தினமும் காலை மாலைகளில் விசேஷ ஆராதனைகள் நடைபெறும். இறுதிநாள் பாடற்பூசையுடனும் சுற்றுப்பிரகாரத்துடனும் திருநாள் முடிவடையும். இறுதிநாளன்று காணிக்கை மாதா சுரூபம் ஊர்வலம் மயிலிட்டி, பலாலி ஆகிய இடங்களை சுற்றி வரும்.

இதற்கான ஒழுங்குகளை மயிலிட்டி காணிக்கை மாதா கோவில் கட்டளைக்குரு வண. பிதா. ஆர். சி. தார்சீசியஸ் கவனித்துள்ளார்.

## கலாமன்ற நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு திருமாறன் கலாமன்ற நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. சிவஞானம், உபதலைவர்: திரு. இராசதுரை, செயலாளர்: திரு. நா. யோகலிங்கம், உபசெயலாளர்: திரு. ஆர். இரத்தினசாமி, தனாதிகாரி: திரு. மா. சன்முகராசா.

## சுழிபுரம் பயிர்ச் செய்கைக் குழு

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பயிர்ச் செய்கைக் குழுவின் விசேஷ கூட்டம் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் விக்டோரியாக் கல்லூரியில் நடைபெற்றது. விவசாயம் சம்பந்தப்பட்ட கஷ்டங்கள் பற்றி ஆராயப்பட்டதுடன் விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 27—1—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 7-00 கிராம சஞ்சிகை, 7-30 யூனெஸ்கோ உரைச்சித்திரம், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்விருப்பம்.

## கொலை வழக்கில் எதிரிகள் றிமாண்டில்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி புலோலி தெற்கைச் சேர்ந்த ஆர். விசுவலிங்கம் என்பவரை அடித்து படுகாயம் உண்டாக்கி மரணம் விளைவித்ததாக பொலிசாரால் குற்றஞ்சாட்டிய வழக்கில் அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கைம்பெண் முத்தம்மா சிவபாக்கிய லோகேஸ்வரி இரத்தினமணி ஆகிய மூவரையும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா இம்மாதம்30ம் திகதிவரை தொடர்ந்து றிமாண்டில்வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

திரைப்பட விமர்சனம்

## பொன்னுன வாழ்வு

'திரைவண்டு'

தமிழ்ப்படங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது பொதுவாக முதல் காட்சியிலிருந்து கடைசிக் காட்சிவரை ஒவ்வொரு காட்சி முடிந்ததும் அடுத்த காட்சி இப்படித்தான் இருக்கும் கதாநாயகன் இப்படித்தான் செய்வார். கதையும் இப்படித்தான் முடியும் என்று சொல்லிவிடலாம். இதற்கு மாருக கதையில் புதிய திருப்பங்களுடன் விறுவிறுப்புச் சிறிதும் குறையாமல் பூமகள் பிக்சர்ஸ் 'பொன்னுனவாழ்வு' படத்தைத் தயாரித்திருக்கின்றனர். இந்தப் படம் இப்பொழுது மானிப்பாய் வெஸ்லிதியேட்டரில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

அண்ணன்தம்பி பாசத்தை மட்டுமல்ல நல்ல இலட்சியத்தையும் வற்புறுத்தும் கதையமைப்பைக் கொண்ட இப்படத்தின் கதையைச் சொல்லிவிட்டால் படத்தைப் பார்க்கச் சொல்லும் உங்களுக்கு சுவைகுன்றிவிடுமல்லவா?

அண்ணனுக சுந்தரராஜனும் அன்புத் தம்பியாக ஜெய்சங்கரும் அருமையாக நடித்திருக்கின்றனர். படிப்பிலேயே கவனமாக இருக்கும் ஜெய்சங்கர் வெறும் கோழையென எல்லாப் பெண்களையும்போல நினைத்த வனஜா (கே. ஆர். விஜயா) அவனை வீரனுக்க நினைத்து உடற்பயிற்சி நிலையத்திற்கு அழைத்துச் செல்வதும் அங்கு அவனை மிரட்டவந்த வீரர்கள் அவனிடம் அடி வாங்குவதும், அவனைக் காதலித்து படிப்பை உதறிவிட முனைந்த வனஜாவுக்குப் படிப்பு முதல் அதன் பின்னர்தான் மற்ற விஷயங்கள் என அறிவுரைகூறி அவளைத் திருத்துவதும் அதைப் பார்த்து அவள் தந்தை அவன்மீது பாசம் வைப்பதும் நல்ல கட்டங்கள். அதற்கேற்ற அர்த்தபுஷ்டியுள்ள வசனங்கள். அண்ணன் தியாகுவின் மனைவி இறந்து விடுவதை சிறப்புக் காட்சியாகக் காட்டுவதும் மண்ணெண்ணெய் விளக்குத் தடடுப்பட்டு விழுந்து பற்றி எரிந்து நூர்வதுடன் தகனக்கிரியை முடிந்துவிட்டதாகக் காட்டுவதும் டைரக்டரின் திறமைக்கு ஒரு சான்று.

குழந்தையின் ஒரு பாடலுடன் நேருமாமா உயிருடனிருக்கையில் குழந்தைகளுடன் பேசி, விளையாடி மகிழும் காட்சி முதல் அவரது இறுதியாத்திரைவரை காட்டப்படும் ஒட்டுக்காட்சி பொருத்தமாகவும் உள்ளத்தை நெகிழவைப்பதாகவுமிருக்கிறது.

சண்டிக்கட்டுடன் தோன்று கடைசிவரை சண்டிக்கட்டை அவிழ்க்காமலே சிரிக்கவைக்க முயலும் நாகேசுக்கு ஜோடிமனோரமாஎன்ருல் போதுமே!

கே. ஆர். விஜயா, புஷ்பலதா, வி. கே. ராமசாமி' சுந்தரிபாய் ஆகியோருடன் கௌரவ நடிகராக வடும் தங்கவேலுவும் கச்சிதமாக தங்கள் பங்கைநிறைவேற்றி படத்தின் வெற்றிக்கு உதவிருக்கின்றனர்.

நல்லகதை. நல்ல நடிப்பு நல்லவசனம் நல்ல டைரக்ஷன் ஆகியவைகளைக் கொண்ட ஒரு நல்ல படம் 'பொன்னுன வாழ்வு' மானிப்பாய்வெஸ்லி தியேட்டரில் இந்த பொன்னுன சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தவறவிடாதீர்கள்.

## சந்தேகம்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை தபாற்கந்தோர் கட்டப்படுமா என்பதற்கு இன்னுமொரு சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

பலவருடகாலமாககாங்கேசன்துறை தபாற்கந்தோர் கட்டுவதற்கு திட்டமிட்டு காணி வாங்கியிருந்தும்இதுவரையிலும் கட்டிடம் கட்டப்படாமலிருந்தது. இச்சந்தேகத்தை மேலும் பலப்படுத்துவதற்கு தற்பொழுது இருந்துவரும் தபாற்கந்தோருக்கு அருகில் தந்தி தொடர்பு நிலையம் கட்டப்பட்டு வருவதே காரணம். இதுபற்றி இப் பகுதி மக்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## இவர்களின் முன்மாதிரி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசாமியும் எட்டாம் வட்டார அங்கத்தவர் திரு. அ. நன்னித்தம்பியும் கிராமசபையில் புதிய ஒழுங்கை ஒன்று அமைக்கும் வேலையில் முழுநேர ஊழியராகக் கடமையாற்றினர். கல் பரவுதல் போன்ற வேலையில் இவர்கள் ஈடுபட்டனர். இதனைக் கண்ட பொதுமக்களும்சபை ஊழியர்களும் தாமாக முன்வந்து ஒழுங்கை அமைக்கும் வேலையில் கலந்து கொண்டனர்.

## நயினுதீவு கி.ச. கோருகிறது

ஊர்காவற்றுறை ஞாயிறு

கடலரிப்பினுல் மிகவும் பாதிக்கப்பட்டுவரும் நயினுதீவைக் காப்பாற்ற உடன் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நயினுதீவுக் கிராமசபை தல தாபன அமைச்சரைக் கேட்கவிருக்கின்றது.

## விவசாயிகள் கஷ்டம்

சுழிபுரம், ஞாயிறு

வலி. மேற்கு ப. நோ. கூ. ச. சமாஜம் வழங்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களுடன் கொடுக்கப்படும் இயந்திரம் இயக்குதல் சம்பந்தமான சகல விபரங்களும் சிங்கள மொழியிலேயே இருப்பதால் பாவனையாளர்கள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர்.

## வடமராட்சி பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

பருத்தித்துறை, ஞாயிறு

"ஆசிரியர்களாகக் கடமையாற்றும் கலாநிதி எம். ஏ. பட்டதாரிகளுக்குக் கூடுதலான சம்பளம் வழங்கும் அதே வேளையில் சிறப்புப் பட்டதாரிகளுக்கும், பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கும் சம சம்பளம் வழங்குதல் அவசியம். ஆசிரியடையே அதிக சம்பள வேறுபாடு நிலவுவது இன்றைய கல்வி அபிவிருத்தியையும், எதிர்கால சந்ததியையும் பாதிக்கும்."

இவ்வாறு வடமராட்சி பட்டதாரிகள் சங்கம் சம்பளக் கமிஷனுக்கு அனுப்பியுள்ளமகஜர் ஒன்றில் கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி சுவீப் விற்பனையில் கட்டாயமில்லை

## இந்திய குடியரசு தினத்தில் கௌரவப் பட்டம் பெற்றோர்

புதுடில்லி. ஜன.26

இந்திய குடியரசு தினத்தையொட்டி பல்வேறு துறைகளிலும் சிறந்த பணியாற்றியவர்களுக்கு பத்மவிபூஷன், பத்மபூஷன், பத்மஸ்ரீ ஆகிய விருதுகள் வழங்கி இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஸாகிர்ஹுசெயின் கௌரவித்திருக்கிறார்.

இம்முறையாருக்கும் பாரத ரத்ன பட்டம் வழங்கப்படவில்லை.

நோபல் பரிசு பெற்ற டாக்டர் கொரானுவுக்கு பத்மவிபூஷன் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்திய வெளிவிவகார இலாகா முன்னாள் தலைமைக் காரியதரிசி திரு. ஜோஷி ஐ. நா. வில் பணியாற்றிய ராஜேஸ்வரதயாள் ஆகியோர் உட்பட மொத்தம் 5 பேருக்கு 'பத்மவிபூஷன்' பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

'பத்மபூஷன்' பட்டம் பெற்றவர்களில் கர்நாடக சங்கீதவித்வான் செம்மங்குடி சீனிவாச ஐயங்கார், திரைப்படத் தயாரிப்பாளர் ஜெமினி அதிபர் திரு. எஸ். எஸ். வாசன், வட இந்திய நடிகர் திரு. பிரிதிவிராஜ் கபூர், வடஇந்திய பின்னணிப் பாடகி லதாமங்கேஷ்கார், வங்க எழுத்தாளர் தாராசங்கர், கோவைதுணி உற்பத்தி நிபுணர் கே. சீனிவாசன் ஆகியோர் சிலர்.

'பத்மஸ்ரீ' பட்டம் பெற்ற 55 பேர்களில் திரைப்பட நடிகை பி. சரோஜா தேவி, எழுத்தாளர் வி. சுப்பையா பிள்ளை, நர்த்தகி இந்திராணி ரஹ்மான், நடிகர் பால்ராத்சஹானி கிரிகெகட் ஆட்டக்காரர் போர்டே, ராஜம்ராமசாமி ஆகியோர் சிலர்.

## 10 வருடம் பிரிந்திருந்த மனைவி தணவன் சடலத்திற்கு கண்ணீர்

யாழ்ப்பாணம், திங்கள்

இரண்டு நாட்களுக்கு முன்னர் தனது சகோதரியின் வீட்டிலிருந்து காணமல் போன ஒருவர் கோவில் கிணற்றுக்குள் இறந்துகிடக்கக் காணப்பட்டார். பத்து வருடங்களுக்கு முன்னர் கணவனை விட்டுப்பிரிந்து வாழ்ந்த அவரது மனைவி, கணவனின் சடலத்தைத் தன்னிடம் தருமாறு கண்ணீர் விட்டுக் கதறியபடி பொலிஸாரிடம் வேண்டினார்.

இச் சம்பவம் திருநெல்வேலி கிழக்கில் நடைபெற்றது. இங்குள்ள மயில்வாகனம் என்பவரே திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் கோவில் கிணற்றுக்குள் இறந்துமிதக்கக்காணப்பட்டார்.

பத்து வருடங்களுக்குமுன்னர் மனைவியையும், பிள்ளைகளையும் விட்டுப்பிரிந்த இவர் அன்றிலிருந்து தனது சகோதரியுடன் வசித்து வந்ததாகவும், திடீரென காணமல் போய் நேற்று கோவில் கிணற்றுக்குள் இறந்துகிடக்கக் காணப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற கிராமசேவையாளர் க. சொக்கலிங்கம் சடலத்தை வெளியில் எடுத்ததோடுசாட்சிகளையும் ஆஜர் செய்தார். மரணவிசாரணை நடைபெறுகின்றது.

இக்கிணற்றுள் ஓர் இளைஞனும், யுவதியும் உட்பட நால்வர் ஏற்கனவே மரணமானது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி)

## ஆபத்தான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டால் அது எப்போதும்அபாயம் விளைவிக்கக் கூடியதாகவிருக்கும் என பொலிஸார் அஞ்சுகின்றனர்.

பாலங்களை உடைக்கவும் புகையிரதங்களை தடம்புரளச் செய்யவும் முக்கிய தளங்களை நாசப்படுத்தவும் குன்றுகளையும், பாறைகளையும் உடைக்கவும், இவைகளை களவாடியவர்கள் பாவிக்கலாம் என்ற சந்தேகத்தில் நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இச்செய்தி அறிவிக்கப்பட்டதோடு சகல பொலிஸாரும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

பொதுவேலைப்பகுதிவேலைகளுக்கென பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இப்பொருள்கள் எவ்வாறு களவாடப்பட்டன என்பது இன்னமும் புலனாகவில்லையாம். களவாடப்பட்ட பொருட்களில் 225 ருத்தல் நிறையுள்ள கூடிய அபாயத்தை விளைவிக்கும் துப்பாக்கிச் சன்ன மருந்தும், அபாயத்தொடர்பு வயர்கள். 1512 தகடும் இருந்ததாக பொலிஸார்குறிப்பிட்டனர்.

பொதுவேலைப்பகுதி ஊழியர்கள் சிலரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். கடைசியாகக் கிடைத்த தகவலின்படி எவரும் இன்னமும்கைதாகவில்லை. புலன் விசாரணை நடைபெறுகின்றது.

## ஜயவர்த்தன காலமானார்

லண்டன், ஜன.26

இலங்கையின் முன்னாள் மந்திரிகளில் ஒருவரான மேஜர் டி. எப். ஜயவர்த்தன நேற்றுலண்டனில்காலமானார். அவருக்கு வயது56.


### ஏல விற்பனை

**யாழ்ப்பாணத்தில் 20 அடி றோட் வழியுடன்**
**20 கட்டடத்துக்கேற்ற காணித்துண்டுகள்**

மார்க்கட், ஆஸ்பத்திரி, கல்லூரிகள் ஆகியவற்றுக்கு 1/2 அல்லது 3/4 மைல் கிட்டியதாக 43 பரப்பு காணி திருநெல்வேலி குளத்துக்கருகாமையில் பொது ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும். 11/2X2 பரப்புக்களாகவும் விற்பனை செய்யப்படும். விற்பனைக்கான திகதியை எதிர்பாருங்கள்.

யாழ்ப்பாணத்தில் பிரதிநிதிகள்.
**சி. கனகரத்தினம்**, 3-ம் மைல், கொக்குவில்.
விலாசம்: அவ்லோன் வீதி,
றியல் எஸ்டேட் ஏஜண்ட்ஸ், குருநாகலை.
போன்: 6179 1167


இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ரூ. 75 அபராதம்

அளவெட்டி, ஞாயிறு

சட்ட விரோதமாகத்தயாரிக்கப்பட்ட 7ரூம் வடிசாராயம் வைத்திருந்தவருக்கு 75 ரூபா அபராதம்விதிக்கப்பட்டது.

சட்ட விரோதமாக 7ரூம் வடிசாரயம் வைத்திருந்ததாக குற்றம் சாட்டி சுன்னாகம் பொலிசார் தொடர்ந்திருந்த இவ் வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதுஎதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதினல் நீதிபதி 75 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## ஒரே குடும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கோஷ்டியினர் மற்றொருவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டதாகவும், அவர் அங்குள்ள ஒருவீட்டு முற்றத்தால் ஓடியபோது எதிர்பாராதவிதமாக வீட்டு விருந்தையில் கதைத்துக் கொண்டிருந்ததாயும்பிள்ளைகளும் இதற்கு இலக்கானதாகவும் பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இராஜதுரை எவ்வாறு சுடப்பட்டார் என்பது இன்னமும் தெரிவிக்கப்படவில்லை. சந்தேகநபர் எவரும் இன்னமும் கைதாகவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. துரைசிங்கம் தலைமையிலான பொலிசார் புலன்விசாரணை நடாத்திவருகின்றார். (கா. நி)

## சூதாடினராம்: 13பேர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

சட்ட விரேதமாகச் சூதாடிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் 13 பேரை கரையூர்ப் பொலிசார் கைது செய்தனர்.

கரையூர் பொலிஸ் பகுதியிலுள்ள பீச் றோட்டுக்கு அருகாமையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. கரையூர் பொலிஸ் சார்ஜன்ட் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் 13 பேரையும் கைதுசெய்ததாகத் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் இன்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டனர். (கா. நி)

கோப்பாய் கி. ச.

## மந்திரிக்கு மகஜர் கொடுக்கும்

கோப்பாய், ஞாயிறு

இக் கிராமத்தின் போக்குவரவு வீதித்திருத்தம், மின்சாரவசதி, கட்டட விஸ்தரிப்பு, சுகாதாரம், ஏழைக் குழந்தைகளுக்கான கல்வி வசதி முதலியன அடங்கிய அத்தியாவசிய வேலைத்திட்டங்கள் கொண்ட பொது மகஜரை இம்மாதம் இங்கு விஜயம் செய்ய விருக்கும் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் கோப்பாய் கிராமசபை சமர்ப்பிக்கவுள்ளது.


### தேவை

கந்தோர் பையன்கள் இருவர் தேவை. 15 வயதுக்குட்பட்டவர்கள் நன்று தராதரம் 6-ம் வகுப்பு. திருஞானம் (ஞானசேகரம்) 37 பலவர் கவுஸ் றோட். யாழ்ப்பாணம்.


## வித்தியாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஞாயிறு

கல்விநூற்றாண்டுவிழாவையொட்டி விற்பனவு செய்யப்படும் 'சியவச' சுவீப் டிக்கட்டை கட்டாயப்படுத்தி மாணவர்களிடம் விற்பனவு செய்யவேண்டாம் என வித்தியாதிபதி சகல பிரதேசக் கல்வி இலாகாக்களுக்கும் அறிவித்துள்ளார்.

'சியவச' சுவீப் டிக்கட்டுகள் கட்டாயப்படுத்திமாணவர்களுக்கு விற்பனவு செய்யப்படமாட்டாதென ஏற்கனவே கல்வி அமைச்சர் அறிவித்திருந்தபோதிலும், கட்டாயப்படுத்தி அவைகள் விற்கப்படுவதாக பல புகார்கள் அரசாங்கத்திற்குத்தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வித்தியாதிபதிதிரு, துரைசிங்கம் பிரதேச கல்வி இலாகாக்களுக்கு அனுப்பிவைத்த சுற்றுநிருபத்தில் மாணவர்களின் விருப்பமில்லாமல் சுவீப் டிக்கட்டைத் திணிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டுள்ளார். இதுபற்றி ஆட்சிமன்றத்திலும் பேசப்பட்டது.

நவாலியைச் சேர்ந்த

## இ. போ. ச. ஊழியர் தெஹிவளையில் கொலை

அளவெட்டி, ஞாயிறு

வீட்டில் படுத்துறங்கிய ஒருவர் மறுநாட் காலையில் பார்த்தபோது கொலைசெய்யப்பட்டிருந்தார். தெஹிவளையிலுள்ள ஒரு வீட்டில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

நவாலிவாசியான செல்வராசா என்பவரே தெஹிவளையில் கொலை செய்யப்பட்டவராவர். யாழ்ப்பாணம் இ. போ. ச. வில் கணக்காளர் பகுதியில் கடமையாற்றிய இவர் அண்மையில் கொழும்புக்கு இடமாற்றலாகி கொழும்பு இ. போ. ச. தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றினராம்.

அவரது வீட்டிலேயே வைத்து அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லையென்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின. விசாரணை தொடர்கிறது.

எந்த இடத்தில் வைத்தும்

## மீன்பிடிகாரர் திடீர் சோதனை செய்யப்படுவர்

### பொலிஸார் தீவிர கண்காணிப்பு

நல்லூர், ஞாயிறு

சிறகுவலைத் திருட்டைத் தடுப்பதற்கும் டைனமைட் வைத்து மீன் பிடிப்பதைத் தடுப்பதற்கும் வடபகுதித பொலிஸ் சுப்பிரிண்டன் காரியாலயத்தில் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மீன்பிடிப் பகுதி ஆலோசனைக் கமிட்டி அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் திருட்டைத் தடுப்பதற்கும் டைனமைட் வைத்து மீன் பிடிப்பதைத் தடுப்பதற்கும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

நேற்று நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பண்ணை, குருநகர், நாரந்தனை, சாவக்காடு. கைதடி ஆகிய இடங்களில் இவ்வித செயல்களைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுப்பதெனவும் இதற்குக் கடற்படையினரின் இயந்திரப்படகும், தேவைப்பட்டால் தனியாரின் இயந்திரப்படகும் உபயோகிப்பது என முடிவு செய்யப்பட்டது.

சட்டவிரோதமாக டைனமைட் கடத்தப்பட்டு வருவதைத் தடுப்பதற்கு போதிய பொலிஸ் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

டைனமைட் உபயோகித்துப் பிடிக்கப்படும் மீன்களை உட்கொள்பவர்களுக்கு நோய் வருவதால் இதில் தீவிர கவனம் மேற்கொள்ளப்படவேண்டுமென கருத்து வெளியிடப்பட்டது இதில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் போதிய கவனம் எடுக்கப்படவேண்டுமெனவும் அபிப்பிராயம் வெளியிடப்பட்டது.

டைனமட் வைத்து மீன் பிடிப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்காக மீன்பிடிகாரர்கள் எந்த இடத்தில் வைத்தும் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்கள் கொண்டுசெல்லும் மீன்களை உடனடியாக வைத்திய பரிசோதனைக்கு எடுத்துச்செல்லப்படும், டைனமட் வைத்துப்பிடிக்கப்பட்ட மீன்களெனக் கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட மீன்பிடிகாரர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

## அண்ணாஉடல் நலம் திருப்தி

சென்னை, ஜன. 26

நேற்று நடைபெற்ற அறுவைச் சிகிச்சைக்குப்பின்னர் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரை நன்கு தூங்கினார். பரிசோதனைக்காக எக்ஸ்றே படங்கள் சிலவும் எடுக்கப்பட்டுள்ளன.

காலையில் மீண்டும் அடையாறு மருத்துவ மனைக்கு வந்த டாக்டர் மில்லர் முதலமைச்சரின் நிலைபற்றி திருப்தி தெரிவித்தார். அண்ணாதுரை அடுத்தவாரம் வரையில் சென்னைக்குத் திரும்பக் கூடும் என்றும் 4 — 6 வாரங்கள் தொடர்ந்து ரேடியம் கதிர்ச்சிகிச்சை அளிக்க வேண்டுமென்றும், அதற்குப்பின்னர் மலைவாசஸ்தலத்தில் ஆறு மாதங்களாவது அவர் பூரண ஓய்வெடுக்கவேண்டுமென்றும் டாக்டர் மில்லர் சொன்னார்.

2-வது டெஸ்டில்

## பொலிசார் தேடுகின்றனர்

அளவெட்டி, ஞாயிறு

ஆனைக் கோட்டைப் பொலிஸ்பகுதியைச்சேர்ந்த 18 வயது இளம்பெண்ணைக் காணவில்லை எனபெண்ணின் தந்தை பொலிசில் புகார் செய்துள்ளார்.

கடத்தப்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் இளம்பெண்ணை பொலிசார் தேடிவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org